4-AUG 1920
MADRAS

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே
ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 18. ஆகஸ்டு 1920. இலக்கம் 8.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

ஞானஸ்நான வார்த்தைப்பாட்டை புதிப்பிப்பதின்பேரில்.

(சென்ற டிசம்பர்மீ சஞ்சிகையின் தொடர்ச்சி)

ஞா-னஸ்நானத்தின் போது நாம் கொடுக்கும் வார்த்தைப்பாடு, பசாசையும், அதன் கிரியைகளையும், அதன் ஆரவாரங்களையும் விட்டுவிடுவதில்மட்டும் அடங்கியுள்ளதன்று; ஆனால் விசுவாச சத்தியங்களை நாம் விசுவசிப்பதிலும் அடங்கியுள்ளது. ஆனதுபற்றி ஞானஸ்நானங் கொடுக்குங் குருவானவர் அதைக் கொடுப்பதற்கு முந்தி ஞானஸ்நானம் பெறப்போகிறவனைப் பார்த்து "பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும்வல்ல பிதாவாகிய சர்வேசுரனை அதியோக்கிய பக்தியாக விசுவசிக்கிறாயா? அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் சேசுக்கிறீஸ்து நமக்காக மனிதனாய்ப் பிறந்து பாடுபட்டாரென்றும் விசுவசிக்கிறாயா? இஸ்பிரீத்துசாந்துவையும், பொதுவாயிருக்கிற அர்ச்சியசிஷ்ட சபையையும், அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமூதீதப் பிரயோசனத்தையும், பாவப் பொறுத்தலையும், மாம்ச உத்தானத்தையும், சததமான சீவியத்தையும் விசுவசிக்கிறாயா?" என்னுங் கேள்விகளைக் கேட்கிறார். இக்கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் அவன் "விசுவசிக்கிறேன்" என்று மறுமொழி கொடுத்தபிறகன்றோ அவர் அவனுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறார்? ஆகவே இரட்சண்ணியத்துக்கு விசுவாசம் அத்தியாவசியமென்பது பெறப்படுகின்றது. அன்றியும் அது இரட்சண்ணியத்துக்கு ஆதியும் அஸ்திவாரமுமாயிருக்கின்றது. அஃதின்றி ஞானஸ்நானமும் பிரயோசனப்படாது. "விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சண்ணியமடைவான். விசுவசியாதவனோ குற்றவாளியாக தீர்வையிடப்படுவான்" (மாற்கு XVI. 16). ஆனதினிமித்தம் ஞானஸ்நானம் பெறும் எவனும் அதைப் பெறுவதற்குமுன் விசுவாச சத்தியங்களை விசுவசிப்பதாக வாக்குக்கொடுக்கக் கடமைப்பட்டுள்ளான்.

*
* *

இவ்வாறு வாக்களிக்கப்படும் விசுவாசம் முக்குணங்களையுடையதாகும். முதலாவது: அஃது பொதுவானதா யிருத்தல்

வேண்டும். அதாவது: சர்வேசுரன் நமக்கறிவித்திருக்கும் சகல சத்தியங்களையும், திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கும் பிரதி சத்தியத்தையும், பூலோகத்தில் எவ்விடத்திலும் ஒரே மன ஒற்றுமையாய் விசுவசிக்கப்படும் எல்லா சத்தியங்களையும் விசுவசித்தலாம். இத்தகைய விசுவாசமே பொதுவானதெனப்படும். ஆனதுபற்றியே ஞானஸ்நானத்தின்போது குருவானவர் "பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவை விசுவசிக்கிறாயா?" என்று ஒவ்வொருவரிடத்திலும் வாக்கு வாங்கிக்கொண்டபிறகு "பொதுவாயிருக்கிற அர்ச்சியசிஷ்ட சபையையும் விசுவசிக்கிறாயா?" என்று கேட்டு அதன் விஷயமாயும் வாக்கு வாங்கிக்கொள்ளுகிறார். திருச்சபை விசுவசித்துப்போதிக்கிற சத்தியங்களை நாம் கண்டுபிடித்தாலுஞ்சரி, கண்டுபிடியாவிட்டாலுஞ்சரி, அச்சத்தியங்களை மற்றவர்கள் சத்தியங்களல்லவென்று மறுத்தாலுஞ்சரி, ஒப்புக்கொண்டாலுஞ்சரி ஞானஸ்நானம் பெற்றுள்ளவர்களாகிய நாமெல்லோரும் அவைகளை விசுவசிக்கவேண்டியது கடமை. இன்னின்ன சத்தியத்தை திருச்சபை விசுவாச சத்தியமாகப் போதிக்கின்றதென்று நாம் அறியவருவோமானால் யாதோர் அனுமானத்துக்குமிடங்கொடாமல் அதை விசுவசிக்கக்கடவோம். இப்பேர்க்கொத்த விசுவாசம் நம்மிடத்தில் இல்லையானால், நமக்குள்ள விசுவாசம் பொதுவானதெனப்படாது. திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கும் சத்தியங்களை விசுவசிப்பதென்றால் என்ன? திருச்சபையானது நமதாண்டவரான சேசுக்கிறீஸ்துநாதரால் ஸ்தாபிக்கப்பெற்று, இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரனால் பரிபாலிக்கப்பட்டுவரும் சத்திய சபையென்றும், ஆனபடியால் அது சத்தியத்தையே தாங்கி நிற்கும் தூணும் தளமுமென்றும், அஃதொன்றே சகல ஜாதி ஜனங்களும் இரட்சண்ணியத்தின் துறைமுகத்தைச் சேர இன்றியமையாததும் சேதப்படக்கூடாததுமான மரக்கலமென்றும் முழுமனதுடன் ஏற்றுக்கொள்வதேயாம். ஆனபடியால், திருச்சபை போதிக்கும் சத்தியங்களை விசுவசியாத எவனும் இரட்சண்ணியமடையானென்பது திண்ணம்.

* * *

அஞ்ஞானமும், அவிசுவாசமும், அக்கிரமமும், ஆங்காரமும் மலிந்துகிடக்கும் இக்காலத்தில் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் தங்களுடைய ஞானஸ்நானத்தின்போது வாக்குக்கொடுத்த விசுவாசம் பழுதுபடாமலிருக்க எச்சரிக்கையாயிருக்கக்கடவார்களாக. திருச்சபைக்கும், அதன் போதனைக்கும், அதன் அதிகாரிகளுக்கும் விரோதமாய்ப் பிரசுரிக்கப்படும் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் வாசியாமலும், செய்யப்படும் உபந்நியாசங்களைக் கேளாமலும், 'ஊருடன் கூடிவாழ்' என்று வழங்கிவருவதுபோல் தற்காலத்திய ஜனசமூகத்துக்கும், நாகரிகத்துக்கும், நடை உடை பாவனைகளுக்கும், கல்விக்கும் ஏற்றவாறு நடந்துகொள்ள வேண்டியதெனச் சொல்லி, திருச்சபை போதிக்கும் போதனைகளுக்கும் நல்லொழுக்கத்துக்கும், இன்னும் அதன் கற்பனைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் விரோதமான எண்ணத்துக்கும், பேச்சுக்கும், செய்கைக்கும் இடங்கொடாமலிருப்பார்களாக. கிறீஸ்துவர்களிற் சிலர் தங்கள் உள்ளத்திலுள்ள விசுவாசத்தை மறுதலியாவிட்டாலும் முகப்பிரீதிக்காகவும், இலௌகிக நன்மைகளுக்காகவும், கேவலம் பதிதர்களோடு பதிதர்களாகவும், அஞ்ஞானிகளோடு அஞ்ஞானிகளாகவும் நடந்து, தங்களுடைய விசுவாசத்தை வீணே பங்கப்படுத்திக்கொள்ளுகிறார்கள். சிலர் இது எங்களுடைய ஜாதி வழக்கம், இது எங்களுக்குள் மாமூல் என்று சொல்லி அஞ்ஞான சாங்கிய சடங்குகளைச் செய்கிறார்கள், சகுனசாஸ்திரம் பார்க்கிறார்கள், குறி கேட்கிறார்கள், நல்ல நாள், கெட்ட நாள், முகூர்த்த நாள் பார்க்கிறார்கள். இன்னும் எத்தனையோ பெயர் இத்தகைய அவிசுவாசக் கிரியைகள் பலவற்றை சற்றும் மனங்கூசாமல் செய்கிறார்கள். இவர்களெல்லோரும் தங்களுடைய ஞானஸ்நான வார்த்தைப்பாட்டை மீறி நடக்கிறவர்களென அறியக்கடவார்களாக.

* * *

இரண்டாவது: நம்மிடத்திலுள்ள விசுவாசம் உறுதியுள்ளதாயிருத்தல்வேண்டியது. நமக்கு எப்பேர்ப்பட்ட இடுக்கண், துன்பம், கஸ்தி, சஞ்சலம், இக்கட்டு, இடையூறு, கஷ்டம், நஷ்டம், இன்னும் மரணமுமே வந்துற்றபோதிலும், நாம் நம்முடைய விசுவாசத்தில் தத்தளியாமல் தைரியமாயிருக்கவேண்டியது. இத்தகைய விசுவாசம் நம்மிடத்தில் விளங்க நாம் பயபக்தியுடன்

சர்வேசுரனை நோக்கி எப்போதும் வேண்டிக்கொள்வோமாக. மேலும் நாம் எவ்வளவுக்கு நம்முடைய சத்திய வேதத்தை யறிவோமோ அவ்வளவுக்கு நம்மிடத்திலுள்ள விசுவாசம் ஸ்திரப்படுமாகையால், ஞானோபதேசம், புத்திப் பிரசங்கங் கேட்கவும், அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திர முதலிய ஞானப் புத்தகங்களையும், கத்தோலிக்குப் பத்திரிகைகளையும் வாசிக்கவும் பிரயாசைப்படவேண்டும். இவ்வாறு நம்முடைய விசுவாசத்தை உறுதிப்படுத்திக்கொள்ள நம்முடைய ஞானஸ்நான வார்த்தைப்பாடு நம்மையுடன்படுத்துகிறதென்றாலும், எத்தனையோ கிறீஸ்துவர்களுக்கு புத்திமதிகளும், ஞானப் புஸ்தகங்களும், கத்தோலிக்குப் பத்திரிகைகளும் எட்டிக் கசப்பாயிருக்கின்றன!! இவர்கள் கேவலம் ஒப்புக்கும் உபசாரத்துக்குங் கிறீஸ்துவர்களாயிருக்கிறார்களேயன்றி மெய்யான கிறீஸ்துவர்களன்று.

***

மூன்றாவது: நம்மிடத்திலுள்ள விசுவாசம் உயிருள்ளதாயிருத்தல் அவசியம். அதாவது: அஃது நம்மிடத்தில் நம்முடைய பரிசுத்த சீவியத்தினால் விளங்கவேண்டியது. அதன் நிருணயப்படி நாம் பாவத்தைத் தள்ளி புண்ணியத்தைச் செய்யவேண்டியது. விசுவாசத்தினால்மாத்திரம் எவனும் இரட்சண்யமடையான். ஆனால் அவன் தன்னுடைய விசுவாசம் கற்பிக்கிறபடி நடந்துகொள்ளவும் வேண்டியது. "என்னை நோக்கி: ஆண்டவரே! ஆண்டவரே! என்று சொல்லுகிற எவனும் மோட்ச இராச்சியத்தில் பிரவேசிப்பதில்லை. ஆனால் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவனே மோட்ச இராச்சியத்தில் பிரவேசிப்பான்" (மத். VII. 21) என்று நமதாண்டவரும் திருவுளம்பற்றியிருக்கிறார். இதற்கொப்ப அர்ச். சின்னப்பரும் "பருவதங்களைப் பெயர்க்கத்தக்க எல்லா விசுவாசம் என்னிடத்திலிருந்தாலும் என்னிடத்தில் சிநேகமில்லாவிட்டால் நான் ஒன்றுமில்லை" (1. கொரி. XIII. 2) என்று வசனித்திருக்கிறார். ஆனபடியால் நாம் கொடுத்திருக்கிற ஞானஸ்நான வாக்கின்படி நம்மிடத்திலுள்ள விசுவாசம் உயிரற்றதல்ல, ஆனால் உயிருள்ளது. இதன்படி நாம் சுமுத்திரையாயும் சுறுசுறுப்பாயும் வேத கற்பனைகளை யனுசரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இக்கடமையை ஞானஸ்நானம பெறுகிறவனுக்கு வற்புறுத்திக் காட்டும்பொருட்டே குருவானவரும் அவனை நோக்கி: "சர்வேசுரனுடைய திருச்சபையில் என்ன கேட்கிறாய்?" என்கிறார். அதற்கவன் "விசுவாச"மென்று பதிலுரைக்க, மறுபடியும் அவர் அவனை நோக்கி: "நீ நித்திய சீவியத்தை யடைய அசிப்பாயானால் சர்வேசுரனுடைய கற்பனைகளை யனுசரி" என்கிறார். ஆனபடியால், திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களை விசுவசிக்கவும், அது கொடுக்குங் கட்டளைகளை யனுசரிக்கவும், ஜாக்கிரதையாய் பாவத்தை விலக்கவும், புண்யங்களைச்செய்து பரிசுத்தமாய்ச் சீவிக்கவுமே நாம் ஞானஸ்நானத்தின்போது வாக்குக் கொடுக்கிறோம். என்றாலும் எத்தனையோ கிறீஸ்துவர்கள் இத்தகைய உயிருள்ள விசுவாசமின்றி சீவித்துவருகிறார்கள்! தீர்வையுண்டு, நரகமுண்டு என்று அவர்கள் விசுவசித்தாலும் தங்களுக்குத் தீர்வையுமில்லை நரகமுமில்லை யென்பதுபோல் எவ்வித அக்கிரமத்தையும் புரிந்துவருகிறார்கள். பேராசையும், பிறர் சொத்தை அபகரிப்பதும், பகை வர்மங்கொள்வதும், விபசாரஞ் செய்வதும், வெறியெடுக்கக் குடிப்பதும் இரட்சண்யத்துக்கு இடையூறென்று அவர்கள் விசுவசித்தாலும், அவைகளை அவர்கள் விட்டொழியார்கள். நல்ல பாவசங்கீர்த்தனத்துக்குப் பாவச் சமயங்களைவிட்டு விலகுவது, அதாவது தாங்கள் பாவத்தில் விழக் காரணமாயிருக்கும் ஆள், இடம், பொருள் ஆகிய இவைகளை விட்டொழிக்கவேண்டியதென்று விசுவசித்தாலும், அவைகளை அவர்கள் விட்டொழிக்க மனங்கொள்ளார். பாவத்துக்குரிய வழக்கப் பழக்கங்களை யருவருத்துத் தள்ளி உடனே மனந்திரும்ப தாமதிப்பது மகா ஆபத்துக்குரியதென்று அவர்கள் விசுவசித்தாலும், அதைப்பற்றி அவர்கள் இலட்சியஞ்செய்யாமல் பாவத்திலேயே சீவித்துவருவார்கள். அவர்களுக்குள்ள இத்தகைய விசுவாசம் அவர்களை நரக ஆக்கினைக்குள்ளாக்குமேயன்றி மோட்ச பாக்கியத்துக்கு அவர்களை அருகராக்காது.

***

நாம் ஞானஸ்நானத்தின்போது கொடுத்த வாக்குத்தத்தத்தின்பிரகாரம் நடந்துகொள்ளும்படி நம்மைஎவித்தூண்ட, அர்ச். எப்ரெம் சொல்லியிருப்பதாவது: "ஞானஸ்நான வாக்குத்தத்தத்தின்படி நடந்துகொள்

ளாத ஓர் கிறீஸ்துவனுடைய தனித்தீர்வையிலும் பொதுத்தீர்வையிலும் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற பயங்கரத்துக்குரிய இவ்வார்த்தைகளை: 'தகாத ஊழியனே! உன் வாயினாலேதானே உன்னைத் தீர்வையிடுகிறேன்' (லூக். XIX. 22) என்று சேசுநாதர் அவனுக்குத் திருவுளம் பற்றி, நீ உன் ஞானஸ்நான வார்த்தைப் பாட்டின்படி நடந்துகொள்ள நமக்கு வாக்களித்திருந்தபோதிலும், நீ அதை மீறி நடந்ததற்காக உன்னை குற்றவாளியென்று தீர்ப்புச்செய்கிறோம் என்பார்" என்பதேயாம். ஆனதுபற்றி நாம் நம்முடைய ஞானஸ்நான வார்த்தைப்பாட்டின்படி நடந்து வருகிறோமோ, இல்லையோவென்று நம்மைப் பரிசோதித்துப் பார்ப்போமாக. மீறி நடந்திருக்கும்பட்சத்தில் அதற்காக நல்ல துக்கப்பட்டு, அவ்வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்து அதன்படி நடக்கப் பிரதிக்கினை செய்துகொள்வோமாக. விசேஷமாய் நாம் நன்மை வாங்கும் நாட்களில் அதைப் புதுப்பிக்கத் தவறாமலிருப்பதுமல்லாமல், சோதனை தந்திர நேரங்களிலும் அதைப் புதுப்பிப்போமாக. மேலும் நம்முடைய மரணமட்டும் நம்முடைய ஞானஸ்நான வாக்குத்தத்தத்தின்படி நடந்துகொள்ளவேண்டிய தேவானுக்கிரகத்தை சர்வேசுரனிடத்தில் இரந்து கேட்போமாக.

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

XV
சலமோனின் தாயார்.

"என் தாயாரே! வேண்டியதைக் கேளும், நான் உமக்கு மறுப்பதில்லை" (3 அர்ச. II. 20).

சலமோன் இராஜாவின் தாய் பெத்சாபே. அதோனியாசுக்காக பரிந்துபேச அரசனாக வீற்றிருந்த தன் குமாரனிடஞ் சென்றாள். அப்போது இராசா எழுந்திருந்து அவளுக்கு எதிர்கொண்டுவந்து அவளை வணங்கியபின் தன் சிம்மாசனமமர்ந்தார். தனது மாதாவிற்குந் தனது வலதுபுறத்தில் ஓர் சிம்மாசனமிட அதில் அவளை யுட்காரச்செய்தான். அப்போது அவள் "இறைவனே! நான் உம்மிடம் ஓர் சிறிய மன்றாட்டைக் கேட்க விரும்புகிறேன். எனக்கதை மறுக்கவேண்டாம்" என்றாள். உடனே மாறுத்தாரமாக இராசா "என் தாயாரே! வேண்டியதைக் கேளும். நானுமக்கு மறுப்பதில்லை" என்றார்.

பெற்றோர்மட்டில் சாதாரணமாய்ப் பிள்ளைகள் இருதயத்தில் விசேஷப் பற்றுதலுண்டு. மானிடர் எவருள்ளும் இது சகஜம். கடவுள் தாமே இவ்வன்பை அங்கு பொதிந்துள்ளார் என்கலாம். மக்கள் தன் தந்தை தாய்மாரைக் கனம்பண்ணுவதவசியமென்னுங் கற்பனையையுங் கொடுத்திருக்கின்றார். "பிதாவையும் மாதாவையுஞ் சங்கித்திருப்பாயாக" என்பது ஓர் தேவ கட்டளை. இக்கட்டளையைச் சலமோன் இராஜா செவ்வனே நிறைவேற்றினனென்பது வெளிப்படை. தான் தன் தந்தையாம் தாவீதின் சிம்மாசனம் எறினதும் தனதன்னையின்மீதுள்ள அன்பைக் காட்டும்வண்ணம் தனது வலதுபுறத்தில் அவளுக்கோர் ஆசனத்தைப் பிரத்தியேகமாய் அமைக்க ஆக்ஞாபித்தான். 'தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை' என்பதற்கொப்ப "என் தாயாரே! வேண்டியதைக் கேளும். நான் உமக்கு மறுப்பதில்லை" என்று வசனித்தான்.

1. சலமோன் இராஜா தனது கடமைப் பிரகாரம் தாயைக் கனம்பண்ணினன். மெய்யான சலமோன் அதாவது மெய்யான ஞானமாகிய சேசுநாதர் தனது தாயாம் பரிசுத்த மரியாயைக் கனம்பண்ணி நேசித்தார். மரியாய் சேசுநாதரின் தாயானமட்டும் அவரிடத்தில் மனுப்பண்ண அதிக சுதந்தரம் பெற்றுள்ளாள். அவரும் அவளது மன்றாட்டிற்கிரங்க ஒருவாறு கடமைப்பட்டுள்ளார். இவ்வுலகத்திற் சீவிக்கும் போது அவர் மரியாய்க்கு கீழ்ப்படிந்திருந்தார். சுவிசேஷமே அதற்குச் சான்று. அப்படியாயின் மோக்ஷத்திலிருக்கையில் தன் தாயின் வேண்டுகோளைப் புறக்கணிப்பாரென்று சொல்லத் தகுமோ? வாஸ்தவத்தில் அத்தாயின் வல்லமை இகத்தில் முன்னிருந்ததைவிட பரத்தில் இப்போது அதிகமே. சலமோன் தன் தாயாரைக் கனம்பண்ணியதுபோல் தேவசுதன் தன் மாதாவையுங் கனம்பண்ண நிற்கின்றார். அவள் பரலோகத்திற் கெடுத்துக்கொள்ளப்பட்ட தினத்

தன்று அவளுக்காக அங்கே, அவளது குமாரனுஞ் சேசுவின் வலதுபாரிசத்தில் ஓர் சிம்மாசனமமைக்கப்பட்டது. "இராக்கினி தங்கமய ஆடை யணிந்து உமது வலதுபாரிசங்களில் பலவித பூணிபூண்டு நின்றாள்" (சங். XLIV. 10).

பரலோக பூலோக இராக்கினியாய் முடிசூட்டப்பட்டிருப்பதால் மரியாயின் வல்லமை மற்ற முக்தர்களின் வல்லமையைவிட உயர்ந்ததும் பலிதமானதுமாகும். ஒருவிதத்தில் அவளது வல்லமை கடவுள் வல்லமைபோன்றதென்னலாம். அது அவளுக்குத் தன் சுய சுதந்தரமானதன்று. ஆனால் மன்றாட்டினால் கடவுளிடமிருந்து பெற்றதே. அதாவது எதெதை அவள் கடவுளிடமிருந்து கேட்பாளோ அததை அகத்தியமடைவாள் என்பதே. அவ்வல்லமை மிக்க மேலானதானபடியால் அதை 'சர்வ வல்லப மன்றாட்டு' என அர்ச்சியசிஷ்டவர்களும் வேதபாரகரும் பன்முறை யழைக்கின்றனர்.

தேவமாதாவின் மன்றாட்டு மற்ற எந்த அர்ச்சியசிஷ்டவரின் மன்றாட்டையும்விட அதிக பலனுள்ளதுமட்டுமன்று, மற்றெல்லா அர்ச்சியசிஷ்டவர்களின் வல்லமையையும்விட மேலாய்ச் சித்திக்கக்கூடியதாயுமிருக்கின்றது என சுவாரஸ் வேதசாஸ்திரியார் உரைக்கின்றார். முக்தர்களின் மன்றாட்டுத் தன்னிலே பலன்தரக்கூடியதன்று. கடவுள் கடாட்சத்தாலேயே சித்திக்கக்கூடியது. ஆனால் மரியாய்க்குச் சுதந்தரமுண்டு. எதைக் கேட்கின்றாளோ அதைக் கடவுளளிக்க வேண்டும். "குமாரன் தாயைக் கனம்பண்ணுவதுமன்றி கீழ்ப்படியவும் வேண்டுமன்றோ?" என அர்ச். அந்தோனின் பகர்கிறார். மோக்ஷவாசிகளின் மன்றாட்டைக் கடவுள் புறக்கணிப்பார் என்பது நம்பக்கூடாத விஷயம். அப்படி நடப்பினும் தேவசுதன் தன் தாயார் கேட்பதை ஐயமறச் சந்தோஷமாய் ஈவார்.

தான் விரும்பிக் கேட்பதையெல்லாம் மரியாய் கடவுளிடமிருந்து பெறச் சர்வ வல்லமையுள்ளவள் என்பது வேதபாரகரின் பொதுவான அபிப்பிராயம். "வல்லமையுள்ளவர் உன்மட்டில் பெருங் காரியங்களைப் புரிந்துள்ளார். இகத்திலும் பரத்திலும் உனக்குச் சகல வல்லமையுங் கொடுக்கப்பட்டிருக்கின்றது. உன்னாலியலாத தொன்றுமில்லை, எனெனில் 'அழிந்துபோனோம்' என்று அவநம்பிக்கைப்பட்டோர்க்கு முதலாய் இரட்சணிய நம்பிக்கையை ஊட்ட வல்லபமுடையவள் நீ" என அர்ச். தமியான் இராயப்பர் விளம்புகிறார். "வல்லமையுள்ளவர் உனக்குப் பெருங் காரியங்களைச் செய்துள்ளார். சர்வ வல்லமையுள்ளவர் உன்னிடத்திலிருக்கின்றார். ஆகையால் அவரோடு—அவர் நிமித்தம் நீயுஞ் சர்வ வல்லமையுள்ளவளே" என அர்ச். பொனவெந்தூரா மரியாயைப் புகழ்கின்றார்.

2. அதோனியாஸ் சலமோனின் தாயிடம்போய் தனக்காக அவளது குமாரனிடம் பரிந்துபேசக் கேட்டான். மெய்யான சலமோனின் தாயார் கன்னிமரியாய். மேலான—தவறாத வல்லபம்பொருந்தியவள். அப்படியாயின், பாவிகளாகிய நமக்காகக் கடவுளை மன்றாட என் தேவதாயைப்போய்க் கெஞ்சிக் கேட்கக்கூடாது? சலமோனின் தாய் இவ்விஷயத்தில் மரியாய்க்கு உவமானமாயினும் முற்றும் அரண்பட்டதல்ல. எனெனில் முதலாவது, பூலோக இறைவனின் வல்லமையுஞ் சுதந்தரமும் ஐவேசும் மட்டுப்பட்டவை. ஆகவே தான் எவ்வளவு ஆசிப்பினுந் தன்னிடங் கேட்பதையெல்லாம் அளிக்க அவனுக்குச் சக்தியில்லை. இரண்டாவது, இவ்வுலகில் பரிந்துபேச முன்வருபவர், தமது கருத்துக்கு எவ்வளவு சுத்தமாகத் தோன்றினும், சில சமயங்களில் இராசாவின் எண்ணத்திற்கு முரண்பட்டதையும் அவருக்குப் பிரியப்படாததையுங் கேட்கக்கூடும். அதற்கு மாறாக கன்னிமரியாய் தன் குமாரனை நமக்காக மன்றாடும்போது அளவுகடந்து கேட்டுவிடக்கூடுமெனும் அச்சங் கிடையாது. எனெனில் கடவுளது வல்லமைக்கு வரம்புகிடையாதே. பின்னுங் கடவுளது திருவுளத்திற்கேற்காததை கனவிலேயுங்கூட எண்ணாதவள் அதைக் கேட்பாளோ? இல்லையில்லை. ஆகவே அத்தாயின் மன்றாட்டு கடவுளுக்குப் பிரியமானதாம்.

பிதாவாகிய சர்வேஸ்வரனிடம் சேசுக்கிறீஸ்துநாதர் வழியே செல்லவேண்டுமென்பது மறுக்கப்படாத சத்தியம். சுதனாகிய சர்வேஸ்வரன் நம்மைச் சந்தோஷமாய் எற்றுக்கொள்ள வேண்டுமாயின் அர்ச். பெர்நார்து சொல்லுமாப்போல, "அவருடைய நேசத் தாயான மரியாயே நல்ல வழி. அவரிடமிருந்து அருள்பெறவேண்டின், மரியாயின்மூலமாய்க் கேட்போமாக"

என்று திரும்பவும் அர்ச். பெர்நார்து சொல்லுகிறார். எந்த வழியில் நமக்கு நன்மைகள் வரக்கூடுமோ அவ்வழியே அவைகளை எதிர்பார்ப்பது புத்தி. மரியாயின் வழியன்றி மற்ற எவ்வழியிலுங் கடவுள் வரப்பிரசாதமளிப்பதில்லையென்பது அர்ச்சியசிஷ்டவர்களின் உறுதியான எண்ணம். "மிக்க பரிசுத்த கன்னிகையே! உன்னாலன்றி யிரட்சிக்கப்பட்டவர் ஒருவருமில்லையே. மாசற்ற கன்னிகையே! உன்னாலன்றி பாவச் சேற்றினின்று தப்பித்தவர் ஒருவருமில்லையே. கற்புக்கரசியாகிய கன்னிகையே! உன்னாலன்றி ஒருவரும் மன்னிக்கப்படுவதில்லையே" என அர்ச். ஜெர்மானுஸ் போற்றுகின்றார். "நமது முழு இருதயத்தோடும் அன்போடும் ஆவலோடும் தேவதாயை வணங்குவோம். எனெனில் மரியாயின் வழியாக நமக்கு எல்லாவற்றையுங் கொடுத்தவரின் சித்தம் அதுவே!" என அர்ச். பெர்நார்து போதிக்கிறார். "இஸ்பிரீத்துசாந்துவின் கொடைகளெல்லாம் மரியாயின்மூலமாகவே, அவள் விரும்புவோர்க்கும், விரும்பும் பொழுதும், விரும்பும் விதமாயும், விரும்புமளவும் கடவுளளிக்கின்றார்" என சியெனா அர்ச். பெர்நார்தின் பகர்கிறார்.

மரியாயின் மன்றாட்டால் மெத்த சகாயமடையலாமென்பதற்கு பின்வருஞ் சரிதை ஓர் உதாரணமாகும். லீயேஜ் என்கிற பட்டணத்தில் ஓர் பிரபு இருந்தார். அவருக்கு ஒரே குமாரன். அவன் வாலிபனாயிருக்கையில் பெற்றோர் இறந்தனர். ஆஸ்தியெல்லாம் வாலிபனே யடைந்தான். இதுவரையில் நல்நடத்தையுள்ளவன் துர்மார்க்கர்களோடு கூடிக் காலங்கழிக்கலானான். 'பன்றியோடு கூடிய கன்றும் அசுத்தத்தைச் சாப்பிடும்' என்பதுபோல் தீயாரோடு சேரவே யிவனும் பாவ வழிப்பட்டு நடந்தான். இதனிமித்தம் அவனது பணங் காசு, நிலபுலம் எல்லாங் கொஞ்சங்கொஞ்சமாய் அவன் கைவிட்டகன்றன. 'நெய்க்குடமுடைந்தால் நாய்க்கு வேட்டையாம்.' அதுபோல அவனுடைய அயலானொருவன் இவனது சொத்தையெல்லாங் காவலரைக்குப் பறிமுதல் செய்துவிட்டான். எல்லாம் போயின. வெறுங்கையனானன். தோழர்கள் அவனை யிப்போது அண்டவில்லை. சாப்பாடிறகுமுதலாய ஒன்றுமின்றி திண்டாடுகிறான். முகமறியாத பரதேசம்போய் பிழைக்கலாமென்றிருக்கையில் அவனுக்கு முன் ஊழியஞ் செய்தவர்களில் ஒருவன் அவனிடம் வந்து "எஜமானனே! என் வருந்துகிறீர்? சஞ்சலப்படாதேயும். உமக்குப் பணம் வேண்டுமா?

பிரபு.—பணமா? கிடைத்தால் எவ்வளவு சந்தோஷமடைவேன்.

ஊழியன்.—"சரி! அப்படியானால் என்னோடு வாரும்!" என்று பிரபுவைக் கூட்டி யோர் காட்டினுட் சென்றான். நேரம் இரவு. காரிருள். அங்கு இவன் யாரையோ வரவழைக்கின்றதுபோற் காட்டினன்.

பிரபு.—யாரைக் கூப்பிடுகின்றாய்?

ஊழியன்.—நமது தோஷன்—நமது சகாயி.

பிரபு.—தோழனென்றால்?

ஊழியன்.—சாத்தான்தான்.

பிரபு.—பிசாசா? அவனோடு உறவாடக் கூடாதே.

ஊழியன்.—'அப்படியெல்லாம்பார்த்தால் முடியுமா? நீர் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்.' அச்சமயம் ஓர் சப்தம் கேட்டது: "என்ன கேட்கிறாய்?"

ஊழியன்.—என்னோடிருப்பவர் ஓர் பிரபு. முன் என் எஜமானன். அவருக்குதவி செய்ய வேண்டுகின்றேன்.

சாத்தான்.—அப்படியேயாகட்டும்! ஆனால் அவன் கடவுளை மறுதலிக்கட்டும்.

பிரபு அதற்கிசையமாட்டேனென்று துவக்கத்தில் பிடிவாதம்பண்ணினனாயினும் பின்னர் இசைந்தான்.

சாத்தான்.—சரி! ஆனால் இன்னுமொரு காரியஞ் செய்யவேண்டும். கன்னிமரியாயையும் மறுதலிக்கவேண்டும்.

பிரபு.—அதற்கொருபோதுஞ் சம்மதியேன். தேவதாயை மறுதலிப்பதைவிட இரந்து குடிப்பேன், என்று சாதித்தான். இதைக்கண்ட சாத்தான் நாணப்பட்டு ஓடிப்போயிற்று. பிரபு காட்டைவிட்டுத் திரும்புகையிற் கோவில் கிட்டியது. அங்கு சென்று மாதாவின் பீடத்தண்டை முழங்காற்படியிட்டுக் கண்ணீர் சிந்தித் தனது பெருங் குற்றத்திற்காகப் பொறுத்தல் பெற்றருள மரியாயை மன்றாடுகிறான். அதே சமயம் இவனது அயலான் அங்கு வந்தான். பிரபுவைக் காணவும்

ஓர் தூணின் மறைவிலிருந்து நடந்ததைப்பார்த்து நின்றான். கன்னிமரியாயி தன் கையிலிருந்த குழந்தை சேசுவை நோக்கி "மகனே! இவ்வாலிபனை மன்னிக்கக் கேட்கிறேன். தயவுசெய்து அவன்மீ திரங்கும்" என்றாள். குழந்தை சேசு பதிலளிக்கவில்லை. மரியாய்த் திரும்பவுங் கேட்டாள். தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு குழந்தை சேசு சொன்னதாவது "மாதாவே! இவன் என்னை மறுதலித்துவிட்டான், அவனுக்கு நான் என்ன செய்யக்கூடும்?" என்றார். இதைக்கேட்டு மரியாய் தனது திருக்குமாரனை பீடத்தின்மீதுவைத்து "மகனே! எனக்காக இவன்மீதிரங்கி அவன் குற்றத்தைப் பொறுத்தருள்வீராக" என்று மன்றாடினாள். அப்போது திவ்ய குழந்தை தன் தாயை நோக்கி "மாதாவே! உமக்கு நானொன்றும் மறுக்கமாட்டேன். உம் நிமித்தம் அவனுக்குப் பொறுத்தல் கொடுக்கின்றேன்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

பிற்பாடு பிரபு வெளியே போகையில் அயலானும் பின்சென்றான். இருவருஞ் சந்திக்கவே பிரபுவை 'கோவிலில் என்ன சம்பவித்தது?" என வினவினான். பிரபுவோ என்சொல்வதெனத் தெரியாது திகைத்து நின்றான். அப்போது அயலான் தான் கேட்டிருந்த எல்லாவற்றையும் உடனே சொல்லி அவனிடமிருந்து தான் அபகரித்துக்கொண்ட சொத்தை யெல்லாவற்றையுந் திரும்பக் கொடுத்துப்போடுவதாக வாக்களித்ததோடு தனது மகளையும் அவனுக்கு மணஞ்செய்துகொடுக்கத் துணிந்தான். அதேபிரகாரம் நடந்தது. பிரபு தேவதாய் செய்த மட்டற்ற கருணையைக் கண்டுணர்ந்து கடவுளுக்கும் அவ்வாண்டவளுக்கும் உகந்தவனாய் நடந்துவந்தான்.

(இன்னும் வரும்.)

M. S. M.

உனது வெளியிந்திரியங்களுக்காகிலும் மனதுக்காகிலும் நேரிடும் விரோதம், நிந்தை, அவமானம், வியாதி, உன் சுற்றத்தார் சாவு, ஆஸ்தியினிழப்பு முதலான சஞ்சலங்களையெல்லாம் வீரத்துவத்தோடும் சமாதானத்தோடும் சுவாமிக்காக அனுபவித்து எப்பக்கத்திலும் அவர் திருச்சித்தத்துக்குப் பொருந்தியிருப்பாயாக.

ஒருநாளைக்கொருவிசையாகிலும் அந்த நல்ல பிரதிக்கினைகளைப் புதுப்பிப்பாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

7-ம் அதிகாரம்.

தேவ அக்கினியின் பிரகாசம்—பாஸிதூஸின் வருகை—தாய் சிந்தும் கண்ணீர்களின் வல்லபம்—அகுஸ்தீன் மனேக்கிய மதத்தைவிட்டு நீங்குவது.

(கி. அ. 377—383.)

(முன் தொடர்ச்சி.)

கேவலம் சாமான்ய மனிதர்களிடம் இந்த உபாயம் செல்லும். ஆனால் அகுஸ்தீனிடம்செல்லுமா? அவர் அவ்வளவு சூட்சம புத்தியும், ஆழ்ந்த உணர்ச்சித் தீவிரமும் உடையவராயிருந்தபடியால், மனேக்கிய மதத்தின் தப்பறைகளை வெகு சீக்கிரத்தில் கண்டுபிடித்துவிட்டார். அவரது ஆத்துமமானது மட்டும் முடிவுமில்லாத சத்தியம் ஒன்றில்மாத்திரம் திருப்தியடையும். அப்படிப்பட்ட சத்தியத்திற்காகவே, அது ஆவல்கொண்டு, மனேக்கிய மதத்தில் சேர்ந்தும் திருப்தியடையாமல், மறுபடியும் உண்டான சந்தேக சாகரத்தில் மூழ்கிப்போய், சித்தசலனங்கொண்டு, மனோவாதைப் பட்டது. ஆனதால், அகுஸ்தீன் தனக்கிருக்கும் எல்லா சந்தேகங்களையும்பற்றி, மனேக்கியர்களைக் கேள்விமேல் கேள்வி கேட்டு தனக்கு மனச்சமாதான முண்டாக்கிக்கொள்ள வருந்தினார். ஆனால் திருப்திகரமான விடைகளை யளிக்க அவர்களாலேலவில்லை.

அவர்கள் அவரைச் சாந்தப்படுத்தும்படியாய், தங்களுடைய மேற்றிராணிமார்களுள் ஒருவராகிய பாஸிதூஸ் என்பவர் சீக்கிரத்தில் வரப்போகிறாரென்றும், அவர் மகா சாமர்த்தியரென்றும், எல்லா ஆட்சேபனைகளையும் மறுத்து, சந்தேகங்களைத் தீர்த்து, வேத போதனைக்கடுத்த அதி நுட்பமான விஷயங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிக் கொப்ப, திருஷ்டாந்தத்துடன் விளக்கிக்காட்ட வல்லவரென்றும் சொன்னார்

கள். இதைக் கேட்டதும் அகுஸ்தீன் சந்தோஷங் கொண்டார். ஏனெனில், அவருடைய முக்கியமான ஆசையெல்லாம் தாம் சத்தியத்தின்மட்டில்கொண்ட ஆவலைத் தீர்த்துக்கொண்டு, ஆரம்பத்தில் தமக்கு மனவமைதியை யளித்த அந்த கபட போதனைகளில் உறுதிப்பாடடையவேண்டுமென்பதே. ஆத்தும திருப்தியின்றி யிருக்கவும் அவருக்கிஷ்டமிருந்ததில்லை.

அகுஸ்தீன் மனதில் குடிகொண்டிருந்த இவ்விதமான கலக்கத்தை மோனிக்கம்மாள் அறியாதவளல்ல. தான் கண்ட சொர்ப்பனத்தையும், வயோதிபராகிய மேற்றிராணியாண்டவர் சொன்னவாக்கையும் நினைத்து, தன் குமாரன் கடைசியாய் மனந்திரும்புவாரென்று இவளுக்கு கொஞ்சம் நம்பிக்கையிருந்தது. ஆகவே, அகுஸ்தீன் இப்படி சித்தசலனங்கொண்டிருந்ததைக் கண்டதும், அவர் மனந்திரும்பிவிட்டாரென்று பூரண நம்பிக்கைகொண்டு, கொஞ்ச காலம்வரைக்கும் மனவமைதிகொண்டிருந்தாள். ஆனால் பாவிதூஸ் வருகிறாரென்று கேள்விப்பட்டதும், அவர் வருகிறார் வருகிறாரென்று ஊரெல்லாம் ஏக ஆர்ப்பாட்டமாயிருப்பதைக் கண்டதும், அவளுடைய கண்களிலிருந்து மறுபடியும் கண்ணீர் ததும்பி வடிந்தது. மேலும், தனிமையான இடத்தைத் தேடி, மென்மேலும் செபதபங்களைப் புரிந்து, ஆத்தும சாவுக்கும் பிழைப்புக்குமாயிருக்கும் தனது குமாரன் கதி யெப்படியாகுமோவென்று கையை முறித்துக்கொண்டு, நடக்கப்போகும் காரியாதிகளைக் கவனித்து, என்ன சம்பவிக்குமோவென்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள்.

கடைசியாய் பாவிதூஸ் என்பவன் வந்தான். அவன் பட்டணத்தில் கால்வைக்கும் முன்னமேயே, அவனது கீர்த்திப்பிரதாபம் எங்கும் பெருமையாய் பேசப்பட்டுவந்தது. அவன் பிரபலமடைந்த பிரசங்கிமாத்திரமன்று, ஆனால் தான் போதிக்கும் வேத போதனைக்காக, தன்னையும் தன்னைச்சேர்ந்த யாவற்றையும் பரித்தியாகஞ்செய்த உதாரகுணசீலன். தன் பெற்றோரையும், மனைவி மக்களையும், தன் நாட்டையுமே துறந்து, அப்போஸ்தலத்துவ ஊழியத்திற்கே தன்னை மனப்பூரணமாய் ஒப்புக்கொடுத்தவன். செல்வமென்பதை யிகழ்ந்து தள்ளி, நாளையைப்பற்றி சற்றேனும் கவலைகொள்ளாது, அன்றன்றுள்ள அப்பமிருந்தாற் போதுமென்று மனத்திருப்திகொள்பவன். அவன் மனத்தரித்திரமுள்ளவனும் சாந்தமுள்ளவனும் சமாதானப்பிரியனும் தயாளகுணமுள்ளவனுமிருந்தபடியால், சமயம் நேரிடும்பட்சத்தில், சத்தியத்திற்காகத் தன் உயிரையும் சந்தோஷத்துடன் கொடுப்பவன்.

ஜனங்கள் பொதுப்பட அவன்மட்டில் கொண்டிருந்த அபிப்பிராயம் தப்பறையானதென்று பின்னிட்டுத் தெரியவந்தபோதிலும், நமது சரிதைக்கடுத்த காலத்தில், இப்படிப்பட்ட குணலட்சணங்களை அவன் பூஷணமாக அணிந்திருந்தானென்பது சர்வ சம்மதமாயிருந்தபடியால், அவனது பிரசங்கத்தைக் கேட்க கோடா கோடி ஜனங்கள் ஓடிவந்தார்கள்.

இப்படி ஓடிவந்தவர்களுள் அகுஸ்தீனே முதல்வர். அவர் மயங்கிப்போனார். பிரசங்கியாரின் புத்திசூட்சமத் திறமையும், அடக்கவொடுக்கமும் கம்பீரத்தோற்றமும், ஆசாரசீலமும், வாக்குச் சாதுரியமும். பாஷாலங்காரமும், இரும்பைக் காந்த மிழுப்பதுபோல் அவரது மனதைக் கவர்ந்தன. "ஆதலால் அவரது பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து, அவரை மெச்சிப் புகழ்வதில் சகலரையும் மேற்கொண்டேன்" என்கிறார். இதற்குப்பிறகு அகுஸ்தீன் அர்ச். அமிர்தநாதருடைய பிரசங்கத்தையும் கேட்டார். இவர் பிரசங்கமும், தெளிவுள்ளதாயும் வாக்கலங்காரமுள்ளதாயுமிருந்தபோதிலும், பாவிதூவினுடைய பிரசங்கத்தை அவரால் மறக்கமுடியவில்லை. "அர்ச். அமிர்தநாதருடைய பிரசங்கத்தின் வாக்கலங்காரத்தைக் கண்டு மகிழ்ந்தேன். அவர் பிரசங்கம் பாவிதூஸ் செய்த பிரசங்கத்தைவிட, அதிக வித்வத் திறமையைக் காட்டினபோதிலும், அவ்வளவு இன்பமுள்ளதும் மனக்கவர்ச்சியுள்ளதுமல்ல" வென்றார்.

அகுஸ்தீனுக்கிருந்த அபாயம் பெரியதே. நல்ல வேளைக்கு, மோனிக்கம்மாள் அதை முன்னதாகவே கண்டுகொண்டு, உருக்கப்பெருக்கத்துடன் கர்த்தரைப் பார்த்து மன்றாடினாள்.

சாதாரணமாய், மாதுர்ய பாஷிதத்தைக் கேட்டவுடன், உண்டாகும் களிப்பு சற்று அடங்கவே, அகுஸ்தீன் அமர்ந்து உட்கார்ந்து, யோசிக்கவும் ஆராயவும், துவக்கினார். அவருக்குத்

தோன்றிய முதற் காரியமேதெனில், பாவிதூஸ் எதுவும் நவமானதைக் கற்பிக்கவில்லையென்பதே. அவர் சொல்வது "அவர் வந்தபோது, அவர் மெத்த நல்லவராகவும், சம்பாஷணையில் தேன்போன்ற நாவுடையவராகவும் இருக்கக்கண்டேன். மற்றவர்கள் சொல்வதையே இவரும் சொன்னபோதிலும், எதையும் சொல்வன்மையோடு சொல்லுவார். ஆனால் சத்தியத்தின்மட்டில் ஞானத் தாகங்கொண்டிருந்த என் வாயில், அழகுவாய்ந்த வெறும் பாத்திரத்தை வைத்தால் அதனால் எனக்கென்ன பயன்!" என்பதே.

உண்மையில் பாவிதூவினுடைய விவாதம் கேட்பதற்கு இன்பமுள்ளதாயிருந்தபோதிலும், மற்ற மனேக்கியர்களுடைய விவாதங்களைவிட மேம்பட்டதல்ல. கஷ்டமான சந்தேகங்களை மூட்டி, ஒருவனை மலைக்கப்பண்ணுவதில் அவர் அதிக சாமர்த்தியம் காட்டினரென்பது உண்மையே; ஆனால் மற்ற மனேக்கியர்களைப்போலவே, அச்சந்தேகங்களை நிவர்த்தி செய்யத்தக்க நியாயங்களைக் காட்டினவரல்ல.

தன் மனதை வாதித்துக்கொண்டிருந்த சந்தேகங்களுக்கு, அவரிடம் தக்க விடை கிடைக்குமென்று அகுஸ்தீன் ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தார். ஆனால் பயனில்லை. இதற்கு மாருக, அவர் சாதுரியத்துடன் இன்னும் மேலும் மேலும் புது சந்தேகங்களை மூட்டுவதைக்கண்டு, கோபாவேசங்கொண்டார். பிரசங்கத்தை நிறுத்தி தன் சந்தேகங்களைத் தெரிவித்து; அச்சந்தேகங்களை முற்றிலும் நீக்கி, தனக்கு மனச்சமாதானம் உண்டாக்கும்படி, அவரைக் கேட்க ஆசைகொண்டார். ஆனால் இக்காலத்தைப்போலவே அக்காலத்திலும், மகாஜன சபைகளில் பிரசங்கத்தை நிறுத்துவது வழக்கமல்ல. ஆகையால், தனிப்பட ஒரு நாள் பாவிதூவிடம் பேச, ஒரு பேட்டி ஏற்பாடு செய்யும்படித் தன் சிநேகிதர்களைக் கோரினர். இது சுலபத்தில் ஆனது. அகுஸ்தீனும் தன் சந்தேகங்களைத் தெரிவித்தார். பாவிதூஸ் தத்துவசாஸ்திரியல்லவென்று அவருக்குக் கண்டிப்பாய் தெரியவந்தது. அவன் கற்றதெல்லாம் இலக்கணம் ஒன்று மாத்திரமே. அதுவும் அவ்வளவு செவ்வையாயில்லை. அவன் சிஸரோவின் பிரசங்கங்களில் சிலவற்றையும், செனெக்கா எழுதிய புஸ்தகங்களில் சிலவற்றையும், மற்றும் சில செய்யுள் புஸ்தகங்களையும், தன் சபையாரால் எழுதப்பட்ட சில சிரேஷ்டமான புஸ்தகங்களையுமே படித்தவன். ஆனால், சுபாவத்தில் தனக்கிருந்த சொற்சாதுரியத்தை அடிக்கடி அப்பியாசத்திற்குக் கொண்டுவந்திருந்தபடியால், ஜனங்களுடைய மனதைக் கவரத்தக்க உபந்நியாசங்கள் செய்யும்படியான சாமர்த்தியம் அவனுக்கிருந்தது. அவனுக் கிருந்ததெல்லாங் கூடி, வாக்குச்சாதுரியம் ஒன்றே யொன்று. முடிவில், அகுஸ்தீன் ஏமாந்துபோனர். அவர் மனச்சமாதானத்தை எவ்வளவோ ஆவலுடன் தேடி, அச்சமாதானத்தைக் கண்டடையலாமென்று முழுதும் நம்பி, கைநீட்டிப் பிடிக்கப் போனதும், அது மாயமாய் மறைந்துபோயிற்று.

சில நாட்கள் பொறுத்து, மறுபடியும் பாவிதூவிடம் போனர். இச்சமயத்தில் தத்துவசாஸ்திர விஷயமாயல்ல, ஆனல் பொதுவாய் கல்வி சாஸ்திரத்தைப்பற்றி அவனிடம் ஆலோசனை கேட்டார். ஒரு காரியத்தை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டியது. அது ஏதெனில், சோதிடசாஸ்திர சம்பந்தமாய், மேனஸ் என்பவன் எழுதியுள்ள விஷயாதிகளுக்கும், உரோம சாஸ்திரிகள் திட்டத்தோடு அவதானித்து வரைந்துள்ள விஷயாதிகளுக்கும் உண்டான ஒவ்வாமையைக்கண்டே, முதல் முதல் அவருக்குச் சந்தேகம் பிறந்தது.

இந்த ஒவ்வாமையைப்பற்றி அகுஸ்தீனுக்குச் சமாதானம் சொல்ல மனேக்கியர்களால் முழுதும் கூடாமல் போயிற்று. இருந்தும் பாவிதூஸ் இதற்குச் சரியான சமாதானம் சொல்லி உண்டான மனக்கலக்கத்தை நீக்குவானென்று எப்போதும் அவருக்கு நம்பிக்கை கொடுத்துவந்தார்கள். அப்படியே யவரும் தன் சந்தேகங்களை அவனுக்குத்தெரிவித்தார். இதைக் கேட்டதும், அவன் "காணமல் வேணதெல்லாங் கத்தலாம், கற்ரோர்முன் கோணமல் வாய் திறக்கக்கூடாதே" என்கிறபடி, "இல்லை இல்லை மன்னிக்கவேண்டும், இச்சந்தேகங்களைத் தெளிவிக்க என்னல் ஏலாது" என்று ஒரே கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டான்.

அர்ச். அகுஸ்தீன் சொல்லுவது, "நான் இதுவரைக்கும் கண்ட வாக்குச்சாதுரியவான்கள் எனக்கு கற்பிக்க நேர்ந்துகொண்டு, கடைசியில் யாதொன்றையும் கற்பிக்காமற் போனதுபோல

இவனும் செய்யவில்லை. இவன் அடக்கவொடுக்கமுள்ளவன். தேவ காரியங்களை அறியாதவனாயிருந்தும், தன் அறியாமையை அறியாதவனல்ல. அவ்வறியாமையை என்னிடம் ஒத்துக்கொள்ளவும் நாணினவனல்ல."

இதைக்கண்டு பாவிதூஸின்மட்டில் அகுஸ்தீன் கொண்டிருந்த மதிப்பு அதிகரித்ததென்றாலும், மனேக்கிய மதத்தைப்பற்றி அவர் வீணாகக்கொண்டிருந்த நம்பிக்கை முழுதுமே ஒழிந்துபோயிற்று. மனேக்கியர்களால் சிரேஷ்டமானவனாக எண்ணப்பட்டு, சத்தியத்தைப் போதிக்க அனுப்பப்பட்ட தெய்வமெனத் தீர்மானிக்கப்பட்டவனாலேயே, தன் சந்தேகங்களைத் தெளிவிக்க ஏலாமற் போனபிறகு அவைகளைத் தெளிவிக்க மற்றெவராலும் கூடாது என்று தீர்மானித்தார். அவர் சொல்வது "அப்பிரிவினை சபையிலிருந்துகொண்டே,' அதன் கற்பனைகளை யநுசரித்து, அதன் உள்ளாந்தர இரகசியங்களை இன்னும் அதிகயாய் அறியவேண்டுமென்று நான் கொண்டிருந்த ஆசையும் அவாவும் அன்றோடு தொலைந்தது. அப்போதனைகளை யான் முழுதுமாய் நிராகரித்துத் தள்ளினேன் என்பதல்ல. ஆனால் அவைகளுக்கு மேலானதெதுவும் எனக்குக் கிடைக்காதபடியால் அப்படிப்பட்ட மேலானது எனக்குக் கிடைக்குமட்டும், அதிலேயேயிருக்கலாமென்று தீர்மானித்தேன். இப்படியாக, அநேகரை மரணத்திற்குட்படுத்தும் மாய வலையாயிருந்த இந்தப் பாவிதூஸ் என்பவன், தான் செய்வதென்னவென்று தனக்கே தெரியாமல், என்னை அவ்வலையிலிருந்து விடுவித்தான்."

"'தீமையினின்று நன்மை விளையும்' என்கிறபடி, ஆபத்துக்குரிய இப்படிப்பட்ட பேட்டியினாலுண்டாகிய இந்த நல்ல காரியம், யாராலாயிற்றென்பேன்." அகுஸ்தீனுடைய நன்றியறிதலுள்ள இருதயம் ஒரே தீர்மானமாய் சொல்வதாவது: "ஓ! என் கர்த்தாவே! இப்படிப்பட்ட கண்டத்தில் நீர் என்னைக் கைவிடவில்லை. ஏனெனில், என் தாயார் ஒய்வொழிச்சலில்லாமல், அல்லும் பகலும் அழுது பிரலாபித்து உம்மை மன்றாடி, வியாகுல வாளால் ஊடுருவப்பட்டு இரத்தம் சொரிந்து வடிந்துகொண்டிருந்த தன்னிருதயத்தை, உமக்குப் பலியாக ஒப்புக் கொடுத்தாள்" என்கிறார்.

தன் தாயாரின் விதனத்தை, அகுஸ்தீன் எவ்வளவு சொல்வன்மையோடு விளக்கிக்காட்டுகிறாரென்பதை, இதை வாசிக்கிறவர்கள் கவனிக்கவேண்டியது. "பாலியத்தில் நான் புரிந்த அக்கிரமங்களைக்கண்டு, அழுது பிரலாபித்தாள். இப்போதோவெனில், எனக்கு ஆபத்து அதிகரித்துவருகிறதேயென்னும் விசாரங்கொண்ட அவளிருதயம், வியாகுல வாளால் எவ்வளவு ஆழமாய் ஊடுருவப்பட்டதென்பதை நமக்குக் காட்டும்படி, இரத்தம் வடியும் அவ்விருதயத்தை எனக்காக ஒப்புக்கொடுத்தாள்" என்கிறார் அகுஸ்தீன்.

இப்படியாக, அகுஸ்தீனுடைய சீவியத்தில் மனேக்கிய பிரமை ஒன்பது வருஷமிருந்து தொலைந்தது. சத்தியத்தைத் தேடுவதில் அவருக்கு நேர்ந்த கண்டங்களில், இது இரண்டாவதாம். புஸ்தகங்களிலாவது, சாசனங்களிலாவது, யாதொரு அத்தாட்சியையும் நாம் காணக்கூடாதிருந்தபோதிலும், இந்த இரண்டு கண்டங்களிலும் அர்ச். மோனிக்கம்மாள் நடந்துகொண்ட விதம் அதி ஆச்சரியத்துக்குரியதே. ஆரம்பத்திலேயே அவரைத் தன் வீட்டிலிருந்து துரத்தி, திரும்பத் தன் தெருவாசலில் கால்வைக்கக்கூடாதென்று கட்டளையிட்டு, அவ்விதமாய் அவரது நிர்ப்பாக்கிய நிலைமையை யவருக்குக் காட்டினாள். அதையும் அவர் சட்டைபண்ணாமல் மூர்க்கமாய் இருந்தகாலத்தில், தனது அழுகைப் பிரலாபங்களினாலும், அன்றாடம் சொல்லிவந்த புத்திமதிகளாலும், எச்சரிப்புகளினாலும், வேதவிற்பன்னர்களைக்கொண்டும், சாஸ்திரிகளைக் கொண்டும், மேற்றிராணிமார்களைக்கொண்டும் காட்டிய ஞாயங்களினாலும், ஒய்வொழிச்சலின்றி, அவரது ஆத்துமலாபத்தை நாடி, கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்துவந்த தாழ்ச்சி, சுயப்பரித்தியாகம், தபசு முதலிய புண்ணிய முயற்சிகளினாலும், அவரது மனந்திரும்புதலுக்கு உதவி புரிந்துவந்தாள். கடைசியாய், ஆபத்து மிஞ்சி, அவர் முற்றிலும் பாழாய்ப்போக இதோ அதோவென்றிருக்கும் சமயத்தில், அத்தியந்த உருக்கப் பெருக்கத்துடன், கர்த்தரைப் பார்த்து கடைசி முறையாக மன்றாடி, அவரைக் காப்பாற்றினாள். அந்த ஜெபம் அவ்வளவு மனப்பூரணமான ஜெபமாதலால், அது வியாகுல வாளால் ஊடுருவப்பட்ட இருதயத்திலிருந்து சொரிந்துவரும் இரத்

தத்திற்குச் சமானமென்று அவரே சொல்லுகிறார்.

"முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கிணங்கி, தான் கர்த்தரைப் பார்த்து அழுது மன்றாடினதினால், உண்டாக வேண்டிய காரிய சித்தியை அர்ச். மோனிக்கம்மாள் அறிந்து சந்தோஷப்படுகிறதற்குள், அகுஸ்தீனிடமிருந்து அவளுக்கொரு கடிதம் வந்தது. அதை வாசித்துப் பார்த்தபோது, தனக்கு இன்னும் துன்பங்களிருப்பதாகவும், தன் சத்துவமெல்லாங் கூட்டி இன்னும் அவைகளுடன் போராடவேண்டியிருப்பதாகவும், அவளுக்குத் தெரியவந்தது. அகுஸ்தீன் இன்னும் கடவுளுக்கு வெகு தூரத்திலிருந்தார். அவரது சீவியத்திற்கு இலயமாயிருந்த ஒரு கண்டம்போய், அதிலும் அபாயமான வேறொரு கண்டம் அவருக்கிருந்தது. இந்தக் கண்டத்திலிருந்துதான், மோனிக்கம்மாள் தனது ஓயாத ஜெபத்தினாலும், சுயப்பரித்தியாகத்தினாலும், அத்தியந்த வீரத்தத்துவத்துடன் கடவுளை நேசித்த நேசத்தினாலும், அவரை விடுவிக்கவேண்டியிருந்தது.

(இன்னும் வரும்.)

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—2.

கார்சியாஸ் பிரபுவும் அவர் மனைவியும்.

(முன் தொடர்ச்சி.)

"இக்கோட்டையின் சொந்தக்காரரான பண்டைய பிரபுக்கள் சேர்த்து வைத்திருந்தவை யனைத்தையும் விற்றாயிற்று; இருப்பதெல்லாம் கோட்டையொன்றே; வேலையாட்கள் எல்லோரையும் வேலையை விட்டு நீக்கியாயிற்று. பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டு, தங்களுக்குத் தெரியுமாப்போல், இவ்விடத்தில் அபரிமிதமாயிருந்த சகல சாமான்களையும் உருக்கி நாணயங்களாக்கிவிட்டனர்; இக்குடும்பத்துக்குச் சொந்தமாயிருந்த ஒரே ஆஸ்தியாகிய இந்தக் கோட்டையைமுதலாய் குதுவை வைத்திருப்பதாகக் கேள்வி. இவ்வாறு தனக்குச் சொந்தமான யாவற்றையுந் தோற்று, எங்கள் எஜமாட்டியவர்கள் சேகரித்திருக்குந் தொகை மூன்று லட்சம் பொன்னாணயங்களே. அவைகளை அக்கொடிய துலுக்க அரசனுக்குக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அப்பாதகன் அவற்றை அங்கீகரிக்கமாட்டேன் என்று சொல்லுவதுடன், தான் கேட்ட தொகையில் ஒரு இம்மியுங் குறைக்கமாட்டேன் என்று, தன் பொய்த் தீர்க்கதரிசியின் தாடியின்மேல் ஆணையிட்டிருக்கிறானாம். அல்பான்சோ அரசரும் தம்மாலானமட்டும் அவருக்காகப் பரிந்துபேசியும் ஒன்றும் பயன்படவில்லை; கார்சியாஸ் பிரபு யுத்தத்தில் சிறையெடுக்கப்பட்டவரல்லவென்றும், ஆனால் உடன்படிக்கைக்கு விரோதமாய் நடந்துகொண்டதால் தன் கையில் சிக்கினவரென்றும்போக்குக்காட்டி, காஸ்டைல் அரசனின் மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளிவிட்டான் ஆல்டிமன்."

"அரசன் அவன்மீது படையெடுத்துச் சென்று தன் பிரபுக்களில் மிக்க விசுவாசமும் இராஜபக்தியுமுடையவரான இந்தக் கோட்டைக்குச் சொந்தக்கார பிரபுவை ஏன் மீட்கலாகாது?" என்று மனங்கொதிக்கக் கேட்டான் நமது யௌவன வீரன்.

"கடந்த சண்டையில் அல்பான்சோ அரசருடைய பலங் குன்றிப்போயிற்று. அவருக்குப் போதுமான சேனாபலமுந் திரவியபலமுமில்லையாம். ஆதலால் அவர் மீண்டும் அப்பாதகன் மேல் படையெடுத்துப்போக முடியாமல் இருக்கிறார். இவ்விஷயம் ஆல்டிமனுக்கு நன்றாய்த் தெரியும்; அதனால்தான் அவன் நமது பிரபு விஷயமாய் இவ்வாறு நடந்துகொள்வது. மேலும் நமது எஜமானருக்கு இராஜ சபையில் விரோதிகள் சிலருண்டு: அக்கோழைகள் எஜமானரைக் கண்டால் நடுநடுங்கி நாக்குழறி பயந்திருந்த காலம்போய், சங்கிலியாற் கட்டுண்ட சிங்கம் போலிருக்கும் அவரை இப்போது பரிகசித்துக் கேலிசெய்துகொண்டிருக்கிறார்கள். கஷ்டகாலத்தில்தான் மெய்யான சிநேகிதர்கள் இன்னாரென்று தெரிந்துகொள்கிறோம். ஐயா,

பிரபூ ! நான் சொல்வதை நம்புங்கள். இவ்விஷயத்தில் என் எஜமாட்டியாகிய பிரபுவின் மனைவியார் தற்சமயம் அடைந்திருக்கும் துக்கானுபவம் சொல்லிமுடியாது. அல்லும் பகலும் தன்னுளனை எப்படி மீட்பதென்னுங் கவலையே அம்மாதரசியிடங் குடிகொண்டிருக்கிறது. எற்கெனவே அவர்கள் தம்மிடமிருந்த நகைகளையும், குடும்பத்தில் பரம்பரையா யிருந்துவரும் விலையுயர்ந்த சாமான்களையும் விற்றுவிட்டார்கள். காதகனாகிய ஆல்டிமனை எப்படியாவது தன் விண்ணபத்துக்கிரங்கி, தான் அனுப்பும் பொருளைக் கையேற்றுத் தன் காதலனை விடுவிக்கும்படி, கன்னெஞ்சும் உருக ஆல்டிமனிடம் பேசி அவனை யிணக்கும்பொருட்டு மீண்டும் ஒரு தூதனை டொலீடோ நகருக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆல்டிமன் இந்தத் தடவையும் இணங்குவான் என்பது என்ன நிச்சயம்? அப்படி யிசைந்துவராவிட்டால், இனி நம்பிக்கையே கிடையாதென்று சொல்லலாம்."

"அப்படியானல் கடவுள் நமக்கு உதவி செய்வார்! இல்லை! கிறிஸ்துவ வீரர்களின் திலகம்போன்ற நமது பிரபு தீரர் கேவலம் ஒரு அஞ்ஞானியின் காவற்கூடத்தில் கிடந்தழியும்படி உலக இரட்சகர் ஒருபோதும் சம்மதியார்; இது நிச்சயம் !" என்று இளவீரன் வெகு ஆத்திரத்துடன் மொழிந்தான்.

ஆல்டிமன் கிறிஸ்துவர்கள்மட்டில் கொண்டுள்ள அளவற்ற பகைமையும், அவர்களைத் தொடர்ந்துசென்று பிடித்து எவ்விதத்திலாவது அவர்களை இம்சிக்கவேண்டுமென்கிற அவனுடைய கெட்ட எண்ணமும், அவர்களைச் சித்திரவதைசெய்து கொல்வதற்காக அவன் புதிது புதிதாய் செய்யும் ஏற்பாடுகளும் சகலரும் அறிந்த விஷயங்களே. அஞ்ஞானிகளுக்குப் பயங்கரத்தை வருவிக்கும் கார்சியாஸ் பிரபுவின் மேல் அப்பாதக அரசனுக்குண்டாயிருந்த குரோதமும் விரோதமும் அளவற்றதென்று நாம் சொல்லத்தேவையில்லை. ஆதலால் ஆல்டிமன் தனக்கிருக்கும் பகைமையைக் காட்டிக் கார்சியாஸ் பிரபுவை தன் மனமாறப் பழிவாங்கத் தேடுவான் என்பது திண்ணம். யாராலும் சேகரித்துக் கொடுக்கமுடியாத அவ்வளவு பெருந் தொகையை மீட்புப்பணமாகக் கொடுக்கும்படி கேட்பதினாலேயே தன் பழியை ஒருவாறு தீர்த்துக்கொள்ளலாமென் றெண்ணலாம். மேலும் தான் கேட்ட தொகையை தன் பாதங்களில் கொண்டுவந்து சமர்ப்பிக்கும்போது, அத்தொகையையும் எடுத்துக்கொண்டு, பிரபுவை விடுதலை செய்யமாட்டேனென்று மறுத்துவிட்டாலும் மறுத்துவிடலாம். அல்லது பணம் வேண்டாமென மறுத்து, தன் கைதியை விடமாட்டேனென்று பிடிவாதஞ்செய்யலாம். அப்பாதகன் எதுதான் செய்யத் துணியான்! பஞ்சமாபாதகன்! பொய்ச்சத்தியஞ்செய்து ஜனங்களை வஞ்சிக்கப் பின்வாங்காத காதகன்! இத்தகைய கொடியோன் கையிற் சிக்கியுள்ள கார்சியாஸ் பிரபுவைப் பின்னர் எப்படித்தான் மீட்பது? எவ்வித இடையூறு விபத்துகளுக்கும் அஞ்சாத தீர நெஞ்சனாகிய செபஸ்தியான் மேற்கூறிய வாறு தனக்குள்ளவே சிந்தித்தவனாய், சற்றே தைரியத்தை யிழந்து, இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைத்தான். பின்னர் வேலைக்காரனை விளித்துத் தான் வந்திருக்கும் விஷயத்தை வீட்டெஜமாட்டியிடந் தெரிவிக்கும்படி ஆக்ஞாபித்தான்.

"அம்மாளிடந் தங்கள் வருகையைத் தெரிவிக்க இதோ போகிறேன். ஆனல் போகுமுன் தங்கள் அறையைக் காட்டுகிறேன் வாரும். தங்களைப்போன்ற பிரபுக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனிப்பதற்கல்லவா நாங்கள் இங்கிருப்பது?" என்று சொல்லிக்கொண்டே, கண்களில் நீர் ததும்ப, "அந்தோ! பிரபூ! தங்கள் அறையைப் பார்த்தால் என்ன சொல்வீர்களோ? தங்களுக்கே அடையாளங் கண்டுபிடிக்கமுடியாத அத்தனை மாறுதல்களை அங்கு காண்பீர்கள்!" என்றான்.

இராயப்பன் சொன்னது மெய்தான். மாளிகையின் அறைகள், மண்டபங்கள் எதுவும் முன்னையப்போல் நானாவித விலையுயர்ந்த விநோத சாமான்களால் அலங்காரஞ் செய்யப்பட்டிராமல், பார்த்தவிடமெல்லாம் விரிச்சென்று வெறுமையாயிருந்தது. குடும்பத் தலைவரைச் சிறையினின்றும் மீட்பதற்கு வேண்டிய தொகையை விர்த்திசெய்வதன்பொருட்டு மாளிகையிலிருந்த விலையுயர்ந்த சாமான்களை ஒன்றும் விடாமல் விற்றாயிற்று. இராயப்பன் நமதிளவீரனை அவனுக்கென்று குறிக்கப்பட்டுள்ள அறைக்கு அழைத்துச்சென்றான். தான் முன்தடவை வந்

தபோது தனக்கென்று விடப்பெற்ற அறையே அது ; ஆனால் அங்கே யிருந்த விலையுயர்ந்த சாமான்களைக் காணோம் ; வந்த விருந்தினர்களுக்கு அத்தியாவசியமாய் இருக்கவேண்டிய சில சாமான்கள்மட்டுமே அங்கே வைக்கப்பட்டிருந்தன.

கொஞ்ச காலத்திற்குமுன் கார்சியாஸ் பிரபுவின் மாளிகைக்கு விருந்தினர் சென்றால் அவர்களுக்குச் செய்யப்படும் உபசாரணை இராஜ உபசாரணையென்றே சொல்லவேண்டும். அவர்களுக்களிக்கும் விருந்தின்போது, இனிமை நிறைந்த—விலையுயர்ந்த மதுபானங்களும், அரசர் அரண்மனையில்மட்டும் உபயோகிக்கும் அபூர்வமான கறிவகைகளும், வெள்ளித்தட்டுகளில் விருந்தினர்களுக்கு வழங்குவது வழக்கம். இந்தச் சமயத்திலோ, இராயப்பன் நமதிளைஞனை எவ்வாறு விசாரிக்கிறானென்று பார்ப்போம். இதற்கு முன் கோட்டையின் வேலைக்காரர் சாதாரணமாய் அருந்தும் ஒயின் சாராய புட்டி யொன்றை தன் இடது கையிற் பிடித்துக்கொண்டு, கொஞ்சஞ் சமைத்த கறியும், வீட்டிற் செய்த ரொட்டியும் ஒரு மட்பாத்திரத்தில் வைத்து தன் வலது கரத்தில் ஏந்தியவண்ணம் அறைக்குள் புகுந்தான். இவ்வளவு கேவலமான உணவை யளிக்கவும் காலம் வந்ததல்லவா என்று தனக்குள்ளேயே வருத்தங்கொண்டு, எப்படிப் பரிமாறுவதெனத் தியங்குகையில், வேலைக்காரனுடைய மனக்கலக்கத்தைக் குறிப்பா யுணர்ந்த செபஸ்தியான் பிரபு, ஆறுதலான வார்த்தைகளால் அவனைச் சமாதானப்படுத்த முயன்றான். ஆனால் அந்த உண்மைக்குத்தாரமுள்ள வேலைக்காரன் தான் கொண்டுவந்த உணவை அங்கே வைத்துவிட்டு மிக்க உருக்கத்துடன் அழுதுகொண்டே அவ்வறையைவிட்டகன்றான்.

வெளியில் வந்த வேலைக்காரன் மாடிக்கேறிப்போகையில், யூதன் அவனைக் கண்டு, “நான்தான் பென்தாவீதென்னும் யூதன். இம்மாளிகைக்குச் சொந்தக்காரர், தம்மிடமிருக்கும் நகைகளை வாங்கும்படி அழைத்தது என்னையே” என்றான்.

இராயப்பன் இதைக் கேட்டதும் உடல் சிலிர்த்து, ஒருவித நடுக்கங்கொண்டான். “தேவதாயே! யூதருடைய உதவியை நாடவேண்டிய காலமும் வந்ததே என்று நினைக்க என் மனம் நடுங்குகின்றது!” என்று சொல்லிக்கொண்டே யூதனைத் தன்னுடன் வரும்படி சைகைகாட்டி, தன் எஜமாட்டியின் அறைக்கு அவனை யழைத்துச்சென்றான். அங்கே சென்றதும் பென்தாவீதை அந்த அம்மாளிடம் விட்டு, செபஸ்தியான் பிரபு வந்திருக்கும் செய்தியைத் தெரிவித்து வெளியில் வந்தான். வந்தவன் நேரே செபஸ்தியானிருக்கும் அறைக்கு விரைந்து சென்று, தன் எஜமாட்டி அவன் வருகையைக் கேட்டுச் சந்தோஷிப்பதாகவும், இன்னும் ஒரு மணிநேரத்தில் அவனைப் பார்ப்பதாகவும் தெரிவித்தான்.

இச்செய்தியை இராயப்பன் தெரிவித்தபின், அவன் மீண்டும் வந்து தன்னைக் கூட்டிப் போவதற்காக வரும்வரையில் நமதிளவல் என்ன செய்தானென்று பார்ப்போம். உத்தம சீலியாகிய உரேக்காள் என்னும் அந்தச் சீமாட்டியைப் பார்ப்பதன்முன், செபஸ்தியான், தான் அவளிடம் பேசவேண்டியவை என்ன வென்றும், அவளுக்கு எவ்வாறு ஆறுதல் மொழி கூறுவதென்றும், கார்சியாஸ் பிரபுவை மீட்க ஏதாவது மார்க்கமிருக்கிறதா வென்றும் சிந்தித்தான். அவன் எவ்வளவுக்கெவ்வளவு இக்கடைசி விஷயத்தைப் பற்றிச் சிந்தித்தானோ, அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய பயம் அதிகரித்ததுமல்லாமல், தன் நண்பருடைய நிலைமையும் நம்பிக்கையற்றது போல் தோன்றிற்று. அவன் மனம் இவ்வாறு தாமரையிலை நீர்போல் தத்தளித்துக்கொண்டிருக்கையில், அவனை அழைத்துப்போக இராயப்பன் வந்தான். அப்போது செபஸ்தியான் தன் மனக்குழப்பத்தை வெளிவிடாமல் தன்னாலானவரையில் முயன்று, ஏதோ அமைதியுடனிருப்பதுபோல் காட்டிக்கொண்டான்.

உரேக்காளின் அறைக்குள் இராயப்பன் பிரவேசித்ததும், யூதன் தலைகுனிந்தவண்ணமாய் வெளியே சென்றான். அவனைப் பார்த்ததும் செபஸ்தியான் பிரபுவுக்கு அவன்மட்டிலிருந்த சந்தேகம் யாவும் நீங்கி, அவன் சொன்ன விஷயம் மெய்யென்று தெரிந்தது.

வந்த வீரனைக் கண்டதும், உரேக்காள் பெருமாட்டி, தன் மனதிற் குடிகொண்டுள்ள வருத்தத்தை ஒருவாறு வெளிவிடாமல் அடக்கிக்கொண்டு, மிக்க மனவமைதியுடனும் கிறிஸ்துவ மரியாதையுடனும் அவனை வரவேற்றாள்,

அவள் இவ்வாறு நடந்துகொண்டதொன்றே அவளுடைய உறுதியான வேத விசுவாசத்துக்கும், அவள் தேவ சித்தத்துக்கமைந்திருப்பதற்கும் போதுமான சாட்சியாயிருந்தது. அளவற்ற துன்பத்துக்கும் மிகுந்த சோதனைக்கும் ஆளாய் வருந்தும் நிர்ப்பாக்கியவதியாகிய இந்தக் கற்பரசியைக் கண்டதும், நமதிளைஞன் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை இதை வாசிப்போரே சுலபமாய் யூகித்துக்கொள்ளலாம். அம்மாதர் திலகம் தன்னுபரணதிகளையெல்லாம் விற்றுப்போட்டு, ஒரு விதவையைப்போல் கறுப்பாடையணிந்து, துக்கக்குறியாகத் தன் சிரசில் தரித்திருந்த கறுப்பு முகமூடியை சற்றே விலக்கி, துக்கச் சாயல் படிந்த தன்னழகிய வதனத்தைக்காட்டி நின்றது, மேகச் சாயல் படிந்த சந்திரன் வானில் தோன்றுவதுபோலிருந்தது.

தனக்கு வந்தனமளித்த வீரனுக்கு பிரதியுத்தாமாக அம்மாது, "தேவன் ஸ்துதிக்கப்படுவாராக! உம்மை இச்சமயத்தில் இங்கே வரும்படி யேவிய தேவன் ஸ்துதிக்கப்படுவாராக! நீர் மெய்யாகவே இப்போது ஒரு துக்க வீட்டுக்குள் நுழைந்திருக்கிறீர்! எங்களுடைய நிர்ப்பாக்கிய நிலைமையை நாங்கள் தெரிவித்து எங்கள் துக்கத்தை விர்த்தியாக்கிக்கொள்ளாமலிருக்கும்படி, இராயப்பன் எல்லா விஷயங்களையும் உமக்கு எற்கெனவே தெரிவித்துவிட்டான் என்று நினைக்கிறேன். நாங்கள் இழந்துள்ள பொருளின் மகத்துவத்தையும் சிறப்பையும் நீர் நன்கறிந்திருப்பதால், எங்களுடைய துன்பத்தின் பெருக்கை மற்றவர்களைவிட நீரே நன்குணர்வீர் என்பது நிச்சயம்" என்றாள்.

"கிறீஸ்துவ உலகம் தன்னுடைய சிறந்த வீராதி வீரனையும், அடியேன் தந்தையர்க்குள் சிறந்த தந்தையாரையும் இழந்ததில் யாதொரு சந்தேகமுண்டோ?" என்று தன் மனதிலெழுந்த ஆத்திரத்தை அடக்கமுடியாமல் மொழிந்தான்.

"மெய்தான், நண்பரே! கார்சியாஸ் பிரபு மெய்யாகவே உமக்குத் தந்தையாக இருந்தார்! அவருக்கு உம்மீதிருந்த நேசத்துக்கும் பிதாவடைவான வாஞ்சைக்கும் அளவுமுண்டோ? அவரைப்போல் சிறந்த குணசீலர் எவருண்டு? அவரை நேசியாதவர் யார்? அவரை முன்னிட்டுத் தன்னுடைய ஆஸ்தியையும் உயிரையுமுதலாய்க் கொடுக்கப் பின்வாங்குபவர் எவரேனுமுண்டா?" என்று கொஞ்ச நேரம் அம்மாதரசி பேசமுடியாமல் மௌனமாயிருந்தாள். அதன் பின்னர் அவள் சொன்னதாவது: "இந்தக் கஷ்டகாலத்தில் நீர் எம்மைக் காணவந்தது, எனக்கெவ்வளவோ ஆறுதல்! துன்பம் வந்துற்றபோது, மெய் நண்பர் நமதருகிலிப்பாரேல், அத்துன்பத்தைப் பொறுமையுடன் சகிப்பதற்கான மனத்திடனை அந்த சிநேகிதர் கொடுக்கிறார்கள் என்பது திண்ணம்."

"ஆயினும் நான் என்ன சொல்லப்போகிறேன்? உமக்கு ஆறுதல் வருவிப்பதினும் மேலான விருப்பம் எனக்கு வேறென்னுளது? ஆனால் உம்முடைய துயருற்ற இருதயத்துக்கு ஆறுதல் வருவிக்கக்கூடிய வார்த்தைகளை எங்கே தேடுவேன்? என் மனமே துயரால் நிறைந்து வாடுகிறது; ஆதலால் வீண் வார்த்தைகளால் ஒருவிதப் பயனும் அடையமாட்டோம் என்று நினைக்கிறேன். என் பிரியமுள்ள அம்மா, நான் செய்யக்கூடிய தின்னதென்று சொல்லும். எனக்கு நீர் என்ன கட்டளை கொடுத்தபோதிலும், நான் அதன்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன். என் ஆவி பொருள் யாவும் உமக்கே சொந்தமென்று நிச்சயமாய் நம்பும். அவற்றை நீர் உம்மிஷ்டப்படி உபயோகித்துக்கொள்ளலாம். கார்சியாஸ் பிரபுவை மீட்பதற்கு என்னுயிர், சுயேச்சை முதலியவற்றை இழக்க வேண்டியிருந்தாலும், இழக்கத் தயாராயிருக்கிறேன்."

"அது எனக்குத் தெரிந்த விஷயந்தான்; உம்முடைய நல்ல நேசரை மீட்பதில் உமக்குள்ளவற்றையெல்லாம் பரித்தியாகம் செய்வீர் என்று எனக்குத் தெரியும். அந்தோ! அவற்றால் என்ன பிரயோசனம்? அவற்றால் பயனடையக்கூடுமானால், உம்முடைய நேசமும் என்னுடைய காதலும் இதுவரையில் வேண்டியவற்றைச் செய்து, என்னுடைய ஆருயிர்க் காதலர் தரித்துள்ள சங்கிலியை இதுகாறும் உடைக்காமல் இருக்கமுடியுமா? ஆல்டிமன் பகைமை தணிக்கமுடியாதது. காட்டில் உள்ள சிங்கத்தின் கோபத்தைச் சுலபமாய்த் தணித்துவிடலாம்; ஆனால் இந்த அஞ்ஞான துலுக்கனைச் சமாதானஞ்செய்வது அசாத்தியம். கிறீஸ்துவர்களைத் துன்புறுத்துவதே அவனுக்கு அளவற்ற ஆநந்தத்தை விளைக்கும் சாதனம்போலும்!"

"தாயே! என்ன கஷ்டங்களிருந்தபோதிலும், நாம் நம்பிக்கையை விடுவிடலாகாது. சாவிற்கும் வாழ்விற்கும் மத்தியஸ்தராயிருந்து இவ்வுலகில் சகலத்தையும் நடத்துகிறவர் நம்மைக் கைவிடவில்லை என்பது நிச்சயம்."

"என் நம்பிக்கையெல்லாம் கடவுளிடம் வைத்திராவிட்டால், இந்த நிர்ப்பாக்கியத்தை நான் எவ்வாறு சகிக்கக்கூடும்? நான் அவரிடமே என் முழு நம்பிக்கையும் வைத்து, தானியேல் முனிவரை சிங்கக்குகையினின்றுங் காப்பாற்றியவரும், ஜோனுஸ் என்பவரை ஒரு பெரிய கடல் மீனின் வயிற்றினின்றும் அற்புதமாய் வெளிப்படுத்தியவருமாகிய அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரம்பொருளை நான் தினமும் பணிந்து, அவருடைய பாதமே சரணாகதியென்றடைந்து, அவரை இடைவிடாமல் மன்றாடி வருகிறேன். அப்பரம தேவனுடைய தெய்வீகக் கதிர் ஒன்று கட்டாயம் சிறைச்சாலைக்குள் நுழைந்து என் காதலர் கைவிலங்கைத் தரித்துவிடுமென நான் இன்னும் நம்பிக்கொண்டிருக்கிறேன்."

இவ்வார்த்தைகள் நமதிளவீரன் மனதில் நன்கு பதியவே, அவனைவிட்டு அகலவிருந்த அவன் தைரியமும் மனத்திடமும் அகலாமல் நின்றன. இத்தகைய விசுவாசம் ஒருபோதும் வீண்போகாது என்று அவன் நிச்சயமாய் நம்பினான்.

இந்தச் சமயத்தில் கார்சியாஸ் பிரபுவின் பெண்மக்கள் இருவரும் அங்கே வந்தனர். செபஸ்தியான் அவர்களை முன்தடவை பார்த்தபோது, அவர்கள் இன்னுந் தஞ் செவிலித்தாயாரைவிட்டுப் பிரியாத அவ்வளவு இளங்குழந்தைகளாயிருந்தனர்; இப்போதோ மடந்தைப்பருவம் நீங்கி, அழகும் அன்பும் வர்ய்ந்த இளம் மங்கையராய் விளங்கினர். தங்கள் தந்தைக்கு நேரிட்ட நிர்ப்பாக்கியத்தால் உண்டான துக்கத்தைத் தம் அன்னையாரைப்போல், பொறுமையுடன் சகித்துக்கொள்வதற்குவேண்டிய தைரியம் அப்பாலிகைகளிடம் இல்லையென்றும், அவர்களைப் பார்க்கும்போதே தெரிந்தது. வீரனைக் கண்டதும், அச்சிறுமிகள் தங்கள் வருத்தத்தை யடக்கமுடியாமல் கதறி யழ ஆரம்பித்தனர்; அவர்கள் தாயார் எவ்வளவுதான் ஆறுதல் வார்த்தைகள் சொல்லி அவர்களை கட்டியணைத்துக்கொண்டு தேற்றியபோதிலும், கொஞ்ச நேரமும் அவர்கள் அழுகையை நிறுத்தவில்லை. அம்மங்கையரில் மூத்தவளான எல்வீ அழுகை ஓய்ந்து பேசுவதற்குப் போதுமான அமைதி தன் மனதிற் குடிகொண்டதும், தன் தாயாரின் காத்தைப் பிடித்துக்கொண்டே சொல்வாள்: "அன்புள்ள அம்மா! எங்கள் தந்தையை மீட்கத் தங்களிடம் உள்ளவற்றையெல்லாம் மனமாற பரித்தியாகஞ்செய்தீர். தங்கள் மாதிரிகையைப் பின்பற்றி, நாங்களும் நீங்கள் சேகரித்துள்ள தனக் குவியலுக்கு எங்களாலானதைக் கொடுக்க உத்தரவு அளிக்கவேண்டும். நாங்கள் இப்படிச்செய்வது நியாயமே: ஏனெனில் எங்களிடமிருப்பதெல்லாம் நீங்களும் தந்தையாரும் மனமுவந் தளித்தவைகள் என்பதை நாங்கள் மறக்கவில்லை." இப்படிச் சொல்லிக்கொண்டே மோதிரங்கள், முத்துமாலைகள் முதலிய ஓரிளநங்கை யணியும் பல நகைகள் நிறைந்த சிறு பெட்டியொன்றை, அவ்வறையின் மத்தியிற் போடப்பட்டிருந்த வளைவு மேசையின் மேல் வைத்தாள்; பிறகு பொன்னால் செய்யப்பட்டுத் தன் காங்களில் அணிந்திருந்த கெட்டிக் காப்புகள் இரண்டையும் கழற்றிப் பெட்டியின் பக்கத்தில் வைத்தாள். அவள் தங்கை யொன்றும் பேசாமலே தன்னாசனத்தை விட்டெழுந்து, மேசையண்டைபோய் தான் கொண்டுவந்திருந்த இரண்டு மோதிரங்களையும், முத்துமாலையையும் அந்நகைகளுடன் சேர்த்தாள். இந்த நகைகளைப் பார்க்கிலும் மேலானதும் விலையுயர்ந்ததும், அப்பெண்மணிகளிருவரும் தன் தந்தையின் பிரிவாற்றாமையால் சிந்திய கண்ணீர் முத்துகளால் அவ்வாபரணங்களை அபிஷேகம் செய்ததே. செபஸ்தியான் பிரபு தன் மனதில் எழுந்த இரக்கத்தையும் ஆச்சர்யத்தையும் வாய்திறந்து பேச நாவெடுக்கையில் உரேக்காள் என்னும் உத்தம சீலி அவனைத் தடுத்தாள்.

"நாங்கள் எங்கள் கடமையைச் செய்தோமேயன்றி வேறொன்றும் நூதனமாய்ச் செய்யவில்லையே. தன் கணவனைச் சிறை மீட்க, தன் ஆபரணங்களையும் சுக செல்வங்களையும், வேண்டுமானால் உயிரையுமுதலாய்க் கொடுக்க முன்வராத மனைவியுமுண்டோ? தன் பெற்றோரால் கொடுக்கப்பட்ட ஆபரணாதிகளைத் தன் தந்தையை மீட்பதற்காய்க் கொடுத்துதவும் ஒரு குழந்தை தன் கடமையைச் செலுத்துகிறாளேயொழிய வேறொன்றுமில்லை. செபஸ்தியான்

பிரபுவே! இப்படிச் செய்வதால், எங்களுக்கு ஒருவித கெடுதியுமில்லை. மனத்தாங்கலுமில்லையென்று நிச்சயமாய் நம்பும். எங்களை முன்னிட்டு வேறு சிலர் கஷ்டப்படுகிறார்கள் என்பதைக் கடவுளே யறிவர். நாங்கள் இவ்வாறு இவ்வுலகில் எங்களுக்குள்ளதையெல்லாங் கொடுத்து இந்த நேரத்திலேயே இந்த நேசக் கணவனும் தந்தையுமாகிய எங்கள் பிரபுவை மீட்கக்கூடுமானால், அல்லது அவருடைய துன்பத்தை ஒருவாறு குறைக்கக்கூடுமானால், நாங்கள் எவ்வளவோ சந்தோஷமாயிருப்போம்."

இந்த வார்த்தைகளை அந்தச் சீமாட்டி பேசி முடித்ததும், அவ்விரு சிறுமிகளும் எழுந்து தம் முணர்ச்சிகளை வெகு நேர்த்தியாய் மொழிபெயர்த்துக்காட்டிய தன் தாயாரை ஆலிங்கனம் செய்தனர். நமதிளவீரன் இருதயம் படபடவென்று அடித்துக்கொண்டது; அம்மாதரசிகள் உதாரத்துவத்தில் தன்னிலும் மேம்பட்டவர்களாகும்படி விடலாமா? திடீரெனத் தன்னிருக்கைவிட்டெழுந்து நடுநடுங்கிய குரலுடன் "பொன்னும் வெள்ளியும் என்னிடமில்லை, ஆனால் என்னிடமிருப்பவற்றையெல்லாம் கார்சியாஸ் பிரபுவின் ஊழியத்தில் என் முழுமனதுடன் செலவழிக்க தயாராயிருக்கிறேன். நான் சொன்னபடி நடந்துகொள்ளப் பின்வாங்கேன் என்பதற்குக் கடவுளே சாட்சி" என்று வெகு காம்பீரமாய் மொழிந்தான்.

உரேக்காள் தலைவணங்கி மிக்க மரியாதையுடன், "அப்படியே ஆகக்கடவது" எனப் பதில் கூறினாள். பின்னர் இளம் வீரனை நன்றி நிரம்பிய பார்வையுடன் நோக்கிச் சொல்வாள்:—

"ஆமாம், பிரபு! என்னாதனை மீட்க நீர் யாவற்றையும் பரித்தியாகஞ்செய்வீர் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். உம்முடைய பிரயாசையால் என் கணவர் மீட்சியடைந்தால், அதனால் எங்களுக்குண்டாகும் ஆனந்தம் எவ்வளவோ மேலானதாயிருக்கும்! நீர் இப்போது கொடுத்த சத்திய வாக்கை நிறைவேற்றும்படி கடவுள் ஆசீர்வதித்து அருள்புரிவாராக! எங்கள் ஜெபங்கள் எப்படி உமக்கு உவியாயிருந்து உம்மைப் பின்பற்றுமோ, அதுபோலவே தேவனின் மேலான பிரசன்னம் உம்மைக் கவிந்துகொண்டு காப்பதாக!"

(இன்னும் வரும்.) ச. செல்வன்.

ENVY.
பொறாமை.

(*Communicated.*)

(By M. A. Dasan.)

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுக்குப் பொருந்தாத பாவங்களிலொன்றாகிய பொறாமை என்னும் பாவம் முதன் முதல் உலகத்தைக் கெடுத்ததென்று சொல்லலாம். எப்படியென்றால், பிறருடைய நன்மையின்மேல் பொறாமைப்பட்ட பசாசானது ஆதி ஸ்திரீயாகிய ஏவாளைக் கெடுத்ததன்றோ? சகோதரர்களே! இப்பொழுது இன்னும் பொறாமையென்னும் பாவம் இவ்வுலகத்தில் அதிகமதிகமாய்ப் பரவி விருத்தியாயிருக்கின்றதென்று சந்தேகமறச் சொல்லலாம். நம்முடைய சகோதரர்களில் சிலர் கொஞ்சம் நன்றாய் ஜீவித்தால், கொஞ்சம் உயர்ந்த வஸ்திரங்களை உடுத்தினால், கொஞ்சம் படிப்பாளிகளாக இருந்தால் அது பொறாமைக் குணமுள்ளவர்களுக்கு பொறுக்கமுடியாத மனோ வேதனையையுண்டாக்குகின்றது. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய முகம் கருக, நாவுலர, தொண்டை கம்ம பொறாமையினால் உலர்ந்துபோகின்றார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு கெடுபுத்தி அதிகமென்றும் சொல்லலாம். பொறாமைக்குணமில்லாதவர்களிடத்தில் ஒரு அற்ப மாசாவது கிடையாதோவென்று இந்தப் பொறாமைக் குணமுள்ளவர்கள் கஷ்டத்துடன் தேடிப் பிடித்து அந்த அற்ப மாசை பிரயாதமாய் எடுத்துக் காட்டி அவர்கள்மட்டில் பிறருக்கு உள்ள நல்லெண்ணத்தைக் கெடுக்கத் தலைப்படுகின்றார்கள். "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைப் பாராமல் உன் சகோதரனுடைய கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" (அர்ச். மத்தேயு 7-ம் அதிகாரம். 3-ம் வசனம்.)

இதுமாத்திரமல்ல அவர்கள்மேல் இல்லாததும் பொல்லாததும் சொல்லித் தூற்றித் திரிகின்றார்கள். பிறகு அவர்கள் செய்யுங் காரியம் உத்தமமானதாயிருந்தாலும் அதைப்பற்றி பிறரிடம் பேசும்போது அதன் மாட்சியைக் குறைக்

கும்படியாக. "பாரப்பா, அவனுடைய நிலைமையென்ன, அவனுடைய தகப்பனின் தொழிலென்ன, அவன் தொழிலென்ன, அவன் நாட்டுப்புறத்தான் மகன், பட்டணத்தாராகிய நமக்கல்லவோ அப்பேர்ப்பட்ட காரியங்கள் செய்ய சமர்த்து தேவை" என்பதுபோன்ற போலி நியாயங்கள் பேசி, நீதியாசனத்திலிருந்து நியாயாதிபதியைப்போல் தீர்மானஞ் சொல்லுவார்கள். அவர்களைப்பற்றி நல்ல அபிப்பிராயங் கொண்டவர்களைப்போல் நடித்து, பாசாங்கு காட்டி கபட நாடகஞ்செய்து ஆங்காங்கு இடைக்கிடையே ஒரு அவதூறான வார்த்தையைச் சொல்லி, அவர்களுடைய பேரைக் கெடுப்பார்கள். இப்படிப்பட்ட பொறாமைபுள்ள கிறீஸ்துவர்களுக்கு மனச்சமாதானம் என்பது கிடையவே கிடையாது.

பிறருக்கு வரும் வாழ்வு தங்களுக்குப் பெருந்தாழ்வு, பிறருக்கு வரும் நன்மை தங்களுக்கு வருந் தின்மையென்று நிர்நிமித்தமாய் எண்ணி மனஞ்சலித்துப் போகின்றார்கள். அத்தகையோர்கள் "உப்பிருந்த பாண்டமும், உளவிருந்த நெஞ்சமும் தட்டியுடையமாற்றானே உடையும்" என்னும் உண்மைப் பழமொழிக்கொப்ப உள்ளபடியே தங்கள் மனச்சமாதானத்தைக் காய்மகாரப் பசாசுக்கு விற்றுப்போட்டு எந்நாளும் ஏக்கமுற்று மனோவேதனை யநுபவிப்பார்கள். சகோதரர்களே! இது கத்தோலிக்கு கிறீஸ்துவர்களுக்கு அடுக்குமா, அழகாமா?

சர்வேசுரன் நமக்கு அருளிச்செய்த வேத கற்பனைகள் பத்தும் இரண்டு கற்பனையில் அடங்க 2-வது கற்பனையில் "தன்னைத்தான் சிநேக்குமாப்போலே மற்றவர்களைச் சிநேகிக்கிறது" என்பதை நமது கத்தோலிக்குச் சகோதரர்கள் நன்றாய்ச் சிந்திப்பார்களேயானால் மேற்கண்டவிதமாகச் செய்யமாட்டார்கள்.

ஒவ்வொருவருக்கும் களங்கமற்ற விசாலமான இருதயம் இருந்தால் பூலோகத்தில் மனப்பாக்கியமாய் வாழக்கூடுமாயிருக்கும். மற்றவர்கள் பிழைப்பதைக் கண்குளிரக்கண்டு சந்தோஷித்துத் தானும் கூடியமட்டும் நன்றாய்ப் பிழைக்கத் தேடுவது அழகு. பொறாமையென்னும்படியான பாவத்தைத் தடுக்க மனத்திருப்தியென்னும் புண்ணியத்தை அப்பியாசஞ் செய்வது சிரேஷ்டம். "ஐயன் இட்டது அவருக்கு அது, நமக்கு இது போது" மென்று எண்ணுகிற புத்தியே பூலோகத்தில் மனப்பாக்கியமாய் வாழச் செய்யும் மருந்து. இந்த மருந்து எந்த டாக்டர்களிடத்திலும் கிடையாது; ஆனால் ஒருவரிடத்திலுண்டு. அவர் யார்?

"தம்மில் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கி கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே யிவர்க்கு நாமென்று"

என்ற நீதி வாக்கியப்படி உத்தியோகத்திலும் அல்லது ஆஸ்தியிலும் நமக்கு மேற்பட்டவர்களுடைய ஸ்திதியைக்கண்டு பெருமூச்சுவிடாமல் நமக்கு கீழ்ப்பட்டவர்களுடைய நிலைமையைக் கவனித்து மெய்யாகவே நாம் எவ்வளவோ மேம்பாடுடையவராயிருக்கின்றோமென்று நினைத்து சர்வேசுரனுக்கு நன்றியறிதல் செலுத்தவேண்டுமேயல்லாது அவர்களைக்கண்டு அழுக்காறுகொள்வது இழுக்காகும்.

அண்டை வீட்டுக்காரனுக்கு ஒரு கண் போகட்டும், எனக்கு இரு கண்கள் போனாலும் தாவிலையென்று விளம்பினவன் கதையைப்போல் பொறாமைக் குணம் படைத்தவர்கள் இம்மையிலும் ஈடேறாமற் கெட்டுப்போவதுமன்றி மறுமையிலும் மீளா நரகத்துக்காளாவார்கள்.

பொறாமையென்னும் துர்க்குணமுடையவருக்கு அதன் கூட்டாளிகளாகிய பொய், களவு, கவருடல் முதலிய போன்ற மற்ற துர்க்குணங்களுமுண்டு. ஆதலால் எல்லா தீக்குணங்களுக்கும் முதன்மையாயிருக்கின்ற பொறாமையென்னும் துர்க்குணத்தைவிட்டு பிறர் நேசம் என்னும் பெருமைக் குணத்தை நாடுவது புத்தி.

WIDOW'S MARRIAGE.
விதவா விவாகம்.

கணவனை யிழந்த காரிகையை மற்றொரு புருஷன் கடிமணம்புரிவது விதவா விவாகம் எனப்படும். இத்தகைய விவாகமானது, சர்வேசுரனாலும், திருச்சபையாலும், இராஜாங்கத்தாராலும், மற்றெந்த விதியாலும், வகையாலும் விலக்கப்பட்டதல்ல,

மனைவியை யிழந்த புருஷன் பிறிதொரு மனைவியை மணந்துகொள்ளுங்கையில், புருஷனை யிழந்த பூவைமாத்திரம் மறு புருஷனை மணத்தல்கூடாது என்ற வழக்கம் எப்படியோ இந்த இந்தியாவில்மாத்திரமே வழங்கிவந்துகொண்டிருக்கின்றது. ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா முதலிய கண்டங்களிலும், ஆசியாவில்கூட இந்தியாவைத்தவிர வேறெந்த நாடுகளிலும் இவ்வித வழக்கம் இருந்ததாக அல்லது இருக்கிறதாகத் தெரியவில்லை. இந்தியாவிலும் எல்லா வகுப்பினரும் இவ்வித வழக்கத்தை அநுசரிக்கிறதில்லை. பல ஜாதி பல வகுப்புகள் வதிந்துள்ள இந்நாட்டில் அநேக வகுப்பினர் யாதோர் ஆடங்கமின்றி சர்வ சாதாரணமாய் விதவா விவாகஞ் செய்து வருகிறார்கள். பிராமணர்முதல் சூத்திரர் ஈறுகவுள்ள இந்துக்களுக்குள்மாத்திரம் இவ் விதவா விவாகம் தடுக்கப்பட்டுவந்திருக்கிறது. ஆயினும் இந்துக்களுக்குள்ளே நடந்துவரும் இவ்வழக்கம் வெறும் வழக்கமாயிருக்கிறதே தவிர இவ்வழக்கத்துக்கு ஆதாரமான வேத விதி, ஸ்மிருதிகளில்லையென, அவர்களுடைய குருக்களான பார்ப்பனர்களே சொல்லுகிறார்கள். இவ்வித ஆதாரமற்ற வழக்கம் அயுக்தமும் கெடுதிக்குரியதுமாயிருக்கிறதெனக் கண்ட பார்ப்பார் முதலியோர் தற்போது "பழயன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்றபடி பழய வழக்கத்துக்கு மாறாக தம் தம் வகுப்பினர்களுக்குள் விதவா விவாகத்தைச் செய்து வருகிறார்கள்; ஆதரித்துவருகிறார்கள். இப்படியிருக்க கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களானவர்கள் விதவைகளின் புனர் விவாகத்தைச் செய்யாமலும், செய்பவர்களை யாதரிக்காமலும் இருப்பதுந்தவிர அன்னோர்களைத் தூஷித்து வெறுத்து ஜாதிக்குப் புறம்பாக்குகிறதானது மெத்தக் குரூரமும், கொடுமையும், பாதகமும் என்பதை நாம் சொல்லவேண்டுவதில்லை,

விதவைகளை விவாகஞ் செய்விக்காது வீடுகளில் விட்டுவைப்பதினால் விளையும் வினைகளையும், கேடுகளையும், பாடுகளையும், விபசாரங்களையும், அபசாரங்களையும், சற்று கூர்ந்து சிந்திப்பவர்களுக்கு விதவா விவாகமானது எவ்வளவோ சுகிர்தமான காரியமென்று புலப்படாமற் போகாது. என்றாலும், விதவா விவாகத்தினால் விளையும் நன்மைகளையும், அஃதைத் தவிர்ப்பதினாலுண்டாகும் தின்மைகளையும் நன்கறிந்தவர்களில்கூட சிலர், அதை ஆதரிக்கப் பின்வாங்குகிறார்கள். அவர்கள் சொல்வது இது: "விதவா விவாகம் நல்ல காரியந்தான். அது எவ்வளவோ கெடுதிகளையும் தோஷங்களையும் விலக்கிவிடுகிறது. மற்ற வகுப்பினர்கள் அதை ஆதரிக்கிறார்கள் மெய்தான். ஆயினும், அப்படிப்பட்ட வழக்கம் நம் வகுப்பினர்களுக்குள் இதுவரையில் நடக்கவில்லையே. அது நம் ஜாதியினருக்கு வழக்கமில்லையே. வழக்கமில்லாத காரியத்தைச் செய்தால் நம் ஜாதியினர் அதை அங்கீகரிக்கமாட்டார்களே, "நிர்வாணக்காரர் ஊரில், கௌபீனங் கட்டினவன் பைத்தியக்காரன்" என்பது போல் என்னைப் பைத்தியக்காரனாக்கிவிடுவதுமன்றி, ஜாதிக்கும் புறம்பாக்கிவிடுவார்களே, என் செய்வேன்" என்பதே. இப்படிச் சொல்பவர்களின் அறியாமையையும், நற்காரியத்தைச் செய்ய தைரியமில்லாமையையும்பற்றி நாம் பெரிதும் பரிதாபப்படுகிறோம்.

கேவலம் யாதொரு கெட்ட காரியத்தைச் செய்ய ஒருவன் பின்வாங்கவேண்டும், பயப்படவேண்டும், முன்பின் யோசிக்கவேண்டும். "நன்மை கடைப்பிடி" என்றபடி நல்ல காரியத்தைச்செய்ய பயமேன்? தயையேன் தாக்ஷண்யமேன்? நல்ல காரியத்தைச்செய்யப் பின்வாங்குபவனை உலகம் பயங்காளி, பேதையெனச் சொல்லுமே யொழிய வேறென்ன? பல இடையூறுகளையும் வென்று, துன்பங்களைச் சகித்து ஒரு நல்ல காரியத்தைச்செய்து முடிப்பவனன்றோ உலகத்தாரால் வீரன் எனப் போற்றப்படுவான்? சகல நன்மைக்கும் சம்பாவனை யளிக்கும் நல்ல சர்வேசுரன் இத்துணை நற்காரியத்துக்காக சம்பாவனை யளிக்கமாட்டாரோ?

"காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ" எனச் சொல்லப்படுதலால் யாதொரு காரியம் நல்லதா அவசியமாவெனப் பார்த்தல்வேண்டும். நல்லதும் அவசியமுமானதொரு காரியத்தை வழக்கமில்லையேயெனக் கைவிடுதல் புத்தி யாகாது. ஒரு வகுப்பினர்க்குள் யாதாமொரு புது வழக்கத்தை உண்டுபண்ணப்பார்ப்போமானால் அது தொடக்கத்தில் எல்லோருக்கும் விபரீதமாகத்தான் தோன்றும். விசேஷமாய், உலகத்தின் நவீனப்போக்கையும், நாகரிகத்தையும், நன்குணராத சாமான்யர்களுக்கு அது

பெருந் தப்பறையாகவே காணப்படும். அன்னோர் கூடவே கூடாதெனக் கங்கணங்கட்டி, வாதாடி வழக்கிட்டு அது நிறைவேறவொட்டாமல் அதற்குப் பலவித இடையூறுகளையும் செய்வார்கள்; கட்சி யுண்டுபண்ணிக் கலகமும் செய்வார்கள். ஆயினும் இவையெல்லாம் அறியாமையின் பயனாகிய ஆவேசத்தினால் உண்டாவதே தவிர ஆழ்ந்த யோசனையினாலும், கருத்தினாலுமுண்டாவதல்ல. இவ்வித ஆட்சேபனை, கட்சி, நாளாவட்டத்தில் காற்றிடைப்பட்ட பஞ்செனப் பறந்துபோகும். இது எப்படியென ஒரு உதாரணத்தால் நிரூபித்துக்காட்டுவோம்.

ரிக்ஷாவண்டியானது முதல்முதல் இந்நாட்டிற்குப் புதிதாய்க் கொண்டுவரப்பட்டபோது, ஒரு மனுஷன் சுகமாய் ஏறி உட்கார்ந்துகொண்டிருக்க அவனை இன்னொரு மனுஷன் மிருகத்துக்கொப்ப இழுக்கவிடுவது பிறர் நேசமற்றதும், ஜீவகாருண்யமில்லாததுமான கொடிய செயல்; அப்படிச்செய்வது அடாத பாவம்; அதில் ஜீவகாருண்யமற்றவனே ஏறவேண்டும்; மற்றையோர் ஏறவொண்ணாது என அவ்வண்டியில் ஏறாது விட்டவர் அநேகர். ஆயினும், அதன் சௌகரியத்தையும், பிரயோஜனத்தையும் நாளாவட்டத்தில் அறியலானபின் ஆட்சேபித்தோரிற் பெரும்பான்மையோர் அதை உபயோகிக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். இப்போது ரிக்ஷாவண்டியை உபயோகியாதவர்கள் இல்லையென்றே சொல்லலாம். இத்தன்மைபோல, விதவா விவாகத்தை ஆட்சேபிப்பவர்கள் நாளடைவில் அருகிப்போய்விடுவார்கள். விசேஷமாய்த் தலைவலியுங் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியுமென்பதுபோல, அப்படி ஆட்சேபிப்பவர்கள் வீட்டில், அவர்களை யடுத்தோர் வீடுகளில் விதவைகள் ஏற்படும் (கடவுள் அதைத் தடுப்பாராக) பட்சத்தில், அப்போது விதவா விவாகத்தின் அவசியம் அவர்களுக்கு அதிகமாய் உறுத்தும்.

ஆகவே, விதவா விவாகம் நல்லது, அவசியமானது என்று கண்டவர்கள், மற்றையோர் சொல்லும் ஆட்சேபனைகளுக்குக் காதுகொடாமல், ஒரே உறுதியாயும், வைராக்கியமாயும் நின்று, இடமிருந்தால் தாங்களே செய்வதும், அல்லது செய்விப்பதுந் தவிர, அதைச் செய்யும் ஏனையோரையும் ஆதரித்து அபிமானிப்பார்களானால் அது ஆண்தன்மையாகும். இப்படிப் பத்துப் பேர் செய்வார்களானால், அது வழக்கமாய்விடும். விகற்பந்தோன்றாது. நல்ல காரியத்துக்கு பெரும்பாலும் தொடக்கத்தில் ஆட்சேபனை வரவேவரும். அதை அறிவுடையோர் பொருட்செய்யலாகாது. இவ்வாறு நாம் ஆவலோடு ஆமோதிக்கும் விதவா விவாகம் கத்தோலிக்கு இந்தியருக்குள் சர்வ சாதாரணமாகு நாள் எந்நாளோ அந்நாள் அதிசீக்கிரத்தில் வருமெனவிரும்புகிறோம்.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும், குறிப்புக்களும்.

ஜேர்மனியின் பெருங் கடன்.—ஜெர்மனி 265 ஆயிரம் மில்லியன் பவுன் கடன் கொடுக்கவேண்டுமென்று ஹெர்விர்த் என்ற பண இலாகா மந்திரி அறிவிக்கிறார்.

கெய்சர் ஜீவனம்.—கெயிசருக்கு 10 கோடி மார்க் (ஒரு மார்க்கு சுமார் 10 ரூபாய்) மொத்தமாகக் கொடுத்து விடுவதாகப் பிரஷியா சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனைத் தவிர, 8 அரண்மனைகளும், 83 சிறிய அரண்மனைகளும் பெர்லினில் அநேக வீடுகளும் அவர் ஆளுகையில் இருக்கும். யுத்தத்தால் ஜெர்மனிக்கு ஏற்பட்ட நஷ்டம் ஒன்றையும் வகிக்கவேண்டாமென்றும் அவர் விலக்கப்பட்டிருக்கிறார்.

ஜனசங்கியை.—பத்து வருஷங்களுக்கு ஒரு முறை யெடுக்கப்படும் சென்சஸ் அல்லது கனிஷ்மாரி கணக்கென்னும் ஜனத்தொகை யெடுத்தல், அடுத்த 1921ஆு மார்ச்மீ 18-ந்தேதி இரவு இந்தியாவெங்கும் நடைபெறவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இந்தியா முழுமைக்கும் சென்சஸ் கமிஷனாராக மிஸ்டர் ஜே. டீ. மார்ட்டென் ஐ. சி. எஸ். நியமிக்கப்பட்டிருக்கிறார். கால்நடைகளின் கணக்கும் சமீபத்தில் நடைபெறுமென்று சொல்லப்படுகிறது.

ஸ்ரீமான் எஸ். டி. பல்டானே.—சென்னை, வேப்பேரியின்கண்ணுள்ள பிரபல வர்த்தகராகிய ஸ்ரீமான் எஸ். டி. புல்டானே அவர்கள், சென்னை பிரசிடென்சி ஆனரரி மாஜிஸ்டிரேட்டுகளில் ஒருவராக கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட செய்தி கேட்

டுச் சந்தோஷமானேம். இவர் மெத்த சாந்தமும் பெருந்தன்மையும் பிறர் நேசமும் பொதுநலவாஞ்சையும் பொருந்திய சீமான். இவரது பெருமித குணத்தைக் கவர்ண்மெண்டார் பாராட்டியே ஷை கௌரவ மாஜிஸ்டிரேட் பதவியை அவருக்கு அளித்துள்ளார். இவருக்கு நமது மனமார்ந்த சுப சோபன வாழ்த்து கூறுகின்றோம்.

இந்தியக் கைம்பெண்கள்.—சென்ற கனிஷ்மாரி கணக்கின்படி, இந்தியாவில் 2,59,91,936 விதவைகளிருந்தார்கள். அவர்களில் 15 வயதுக்குட்பட்டவர்கள் 3,91,147 என்றும், 10 வயதுக்குட்பட்டவர்கள் 1,15,285 என்றும், 5 வயதுக்குட்பட்டவர்கள் 19,487 என்றும் கணக்கெடுக்கப்பட்டது. சென்ற ஐரோப்பிய யுத்தத்தினுல் விதவைகளின் தொகை இப்போது பெருக்கமடைந்திருக்கவேண்டும். ஆனதினுல் அதனுல் விளையக்கூடிய அக்கிரமங்களைக் குறைக்க விதவா விவாகம் அத்தியாவசியகமல்லவா?

மின்னல் படம் பிடிக்கிறது.—மின்னல் இடியுடன் மழை பெய்தபோது, ஒரு வீட்டில் நிலைக்கண்ணுடிக்கெதிரில் வைக்கப்பட்டிருந்த பூஞ்சாடியின் சரியான உருவம் இக்கண்ணுடியில் வியப்புக்குரியவிதமாய்ப் பதிந்து காணப்பட்டதாம். பௌதிகசாஸ்திர நிபுணர்கள் இதைக்கொண்டு, இனி மின்சார சக்தியால் படம் பிடிக்கும் சாதனத்தைக் கண்டுபிடிப்பார்கள்போலும். அடுப்பிலேற்றிய பாண்டத்திலிருந்து வரும் நீராவியைக்கொண்டு நீராவி யந்திரங்களையும், மின்னல் மழையுள்ளபோது கர்ற்ருடி பறக்கவிட்ட அநுபோகத்தைக்கொண்டு மின்சார சக்தியையுங் கண்டுபிடித்ததுபோல், ஷை மின்னலால் கண்ட அநுபோகத்திலிருந்து மின்சார சக்தியால் படம் பிடிப்பதும் அசாத்தியமானதல்ல.

யுத்தப் பரித்தியாகம்.—கடந்த ஐரோப்பா யுத்தத்தில், பிரான்சு தேசம் குருக்களை மாளக்கொடுத்தப் பரித்தியாகம் பெரிது. யுத்தக்களத்தில் மாண்டுபோனவர்கள்மாத்திரம் 3,276 குருக்கள் என்றும், காயப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் 8,000 என்றும், மாண்டவர்களில் 80 பேர் டீக்கன் பட்டம்பெற்றவர்கள், 101 பேர் சப் டீக்கன் பட்டம்பெற்றவர்கள் என்றும், மற்றவர்களெல்லோரும் குருப்பட்டம்பெற்றவர்களென்றும், கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இங்கிலாந்து, இத்தாலி, அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி முதலிய தேசங்களிலிருந்து எத்தனை ஆயிரங் குருக்கள் ஷை யுத்தத்தில் மாண்டுபோயிருப்பார்களோ! ஆகவே, பொதுவாய் உலகமெங்கும், விசேஷமாய் இந்தியாவிலும் குருக்களின் தொகையைப் பெருக்க கத்தோலிக்கர் முயற்சி செய்வது அத்தியாவசியமாகிறது.

ஒரு புதுப் பத்திரிகை.—"ஸ்ரீதன்வந்தரி" எனும் பெயர்பூண்ட நவீனப் பத்திரிகையின் நகல் ஒன்று நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இது இந்திய வைத்திய முறையாகிய ஆயுர்வேத வைத்திய விஷயங்களை விளக்கிக்காட்டும் விஷயமாய்ச் சென்னை ஆயுர்வேத கலாசாலையின் சார்பில், வைத்திய பண்டிதரத்ன டி. கோபாலாசார்லு, எ. வி. எஸ்; எ. எம். பி. அவர்களால் மாத மிருமுறை பிரசுரிக்கப்படுகிறது. இந்தியா முழுதும் பிரசித்திபெற்ற ஷை பண்டிதரால் பிரசுரிக்கப்படுகிறதென்பதொன்றே, அப்பத்திரிகையின் பெருமையையும், பிரயோஜனத்தையும் குறிப்பிக்கப் போதுமானதாகும். இதில் தேகசுகத்தைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பும் சாமானியர்களுமேயன்றி, பண்டிதர்களும் கிரகிக்கத்தக்க பல அரிய சிகிச்சா விதிகள் கூறப்பட்டுள்ளன. ஆனதுபற்றி இப்பத்திரிகையை அனைவோரும் வாங்கி வாசித்துப் பயன்பெறலாம். வருஷ சந்தா ரூ 2—8—0.

கண்டி குரு மடம்.—இரு பரித்தியாயங்களில் இம்மட விஷயமாய் பொருளுதவிக்காக எமது சந்தாதாரர்களிடத்தில் விண்ணப்பஞ் செய்துகொண்டுள்ளோமன்றோ? இந்த எமது விண்ணப்பஞ் சன்மானிக்கப்பெற்று ஸ்ரீமான் எம். எஸ். மரியஞானு நாடார்மூலமாய் வசூலிக்கப்பட்டு எமக்கு எட்டியுள்ள தொகையை இப்பத்திரிகையின் இன்னெரு பக்கத்தில் அவரவர்களுடைய நாமதேயத்துடனும் கொடுத்துதவின தொகையுடனும் பிரசுரித்துள்ளோம். இவர்களிடத்தில் விளங்கும் வேதாபிமானத்தையும் தேசாபிமானத்தையும் எமது ஏனைய சந்தாதாரர்களும் பின்பற்றி ஒவ்வொருவரும் ஒரு சிறிது கொடுத்துதவுவார்களானுல் "நல்லாயன்" சந்தாதாரர்களின் நன்கொடை

யாக் ஷி மடத்துக்கு நாமனுப்பக் கோரும் தொகை ரூ 1,000மும் துரிதத்தில் சேர்ந்துவிடுமென்பதற் கையமில்லை.

சத்திய வேதப் பரம்புதல் சபை.—அந்திய தேசங்களில் சத்திய வேதப் பரம்புதலுக்காக ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்த திரவிய சகாயம் ஐரோப்பிய யுத்தத்தினல் தடைபட்டு குறைவடைந்துபோனது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்போது இந்த உத்தம கைங்கரியத்தை அமெரிக்கா கைக்கொண்டுவிட்டது. சென்ற வருஷத்தில் ஷி கருத்துக்காக அமெரிக்காமாத்திரம் 31 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. இது மற்றெந்த தேசமும், எந்த வருஷங்களிலும் கொடுத்த தொகைகளைவிட அதிகமானதாகும்.

தொழிலாளர் வேலை நிறுத்தம்.—இந்தியாவெங்கும், விசேஷமாய்ச் சென்னையிலும், தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்துவருகிறார்கள். தற்போது அநேக தொழிற்சாலைகளிலும், விசேஷமாய் அச்சுக்கூடங்களிலும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்திருக்கிறார்கள். இவர்கள் கேட்குமாறு கூலியும் மற்ற சௌகரியங்களும் கொடுபடாவிட்டால், மாட்சிமைதங்கிய இளவரசர் சென்னைக்கு விஜயஞ்செய்யுங்காலையில் எல்லாத் தொழிலாளர்களும் ஒருங்கே வேலை நிறுத்தஞ் செய்யவேண்டுமென்று ஒரு எண்ணங்கொண்டிருப்பதாக ஒரு வதந்தி யுலாவுகிறது. இவைகளையெல்லாம் நாளாவட்டத்தில் கவனித்துவந்த கவர்ண்மென்டார் இப்பேர்ப்பட்ட வேலை நிறுத்தங்களைத் தடுப்பதற்கு, விசேஷமாய் பொது ஜனங்களின் சௌகரியத்துக்குப் பங்கம் வருவிக்கக்கூடிய வேலை நிறுத்தங்களை கண்டனையாலும் தண்டனையாலும் தடுப்பதற்குத் தகுந்த சாசனங்களைத் தீர்க்காலோசனை செய்து தெரிவிக்கும்படி உத்தியோகஸ்தரும், உத்தியோகஸ்தர் அல்லாதாரும் அடங்கிய ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்கள். அப்படி ஒரு சட்டம் ஏற்படாவிட்டால் பொது ஜனங்களுக்கு மெத்த அசௌகரியம் ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

ஓர் இராஜகுமாரர் குருவாகப்போகிறார்.—சாக்ஸனிகாட்டு பட்டத்து இளவரசராகிய ஜார்ஜ் என்பவர் டுபின்ஜன் என்னும் பட்டணத்திலுள்ள குரு மடத்தில் குருப்பட்டம் பெற ஆயத்தஞ்செய்துவருகிறார். இவர் சென்ற யுத்தத்தின்போது 104-ம் காலாட்படையின் தளக்கர்த்தராயிருந்தாரென்றும், இப்படை ருஷியாவிலும், பிறகு பிரான்சு தேசத்தின் வட பிராந்தியங்களிலும், போர்புரிந்துவந்தகாலையில் தம் படையின் ஆத்தும குருவைத் தம்முடைய கூடாரத்தில் திவ்யபூசை செய்ய நாடோறும் வரவழைப்பாரென்றும், அப்போது தாமே பய பக்தியுடன் பூசைக்கு உதவிசெய்து, திவ்ய நன்மை வாங்குவாரென்றும், யாதோர் காரணத்தின் நிமித்தம் ஷி குருவானவர் இன்னொரிடத்தில் பூசைசெய்ய நேரிட்டால் தமக்குத் திவ்யநன்மையாகிலுங் கொடுத்துவிட்டுப்போக அவரைக் கேட்டுக்கொள்வாரென்றும், கொடிய குளிர் தேசமாகிய ருஷியாவிலிருக்கும்போதுமுதலாய் அதிகாலையில் எழுந்து குளிரைக் கவனியாது பலவித புஷ்பங்களையும் இலைகொடிகளையுஞ் சேகரித்துக் கொண்டுவந்து பலிபீடத்தைச் சிங்காரிப்பாரென்றும், இவரிடத்தில் விளங்கிய இத்தகைய பக்தி விசுவாசக்கிரியைகள் மற்ற இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் சேவகர்களுக்கும் நன்மாதிரிகையாயும் பிரமிப்பாயுமிருந்தனவென்றும், இராசாதி இராசனாகிய நமதாண்டவருக்கே ஊழியஞ்செய்ய இவர் குருப்பட்டம்பெற இப்போது ஆயத்தஞ் செய்வது ஆச்சரியமல்லவென்றும் ஷி ஆத்தும குருவாகிய சங். ரோக் சுவாமிகளே உலாந்து தேசத்திலிருந்து எழுதியுள்ளார்.

உலகத்தில் பேரிய விடுதி.—அமெரிக்கா சிக்காகோவில் உலகத்தில் எங்கும் இல்லாத பெரிய விடுதி ஏற்படும். அதில் 4,000 அறைகள் கட்டப்படும். அதில் 2,500 பேர் அடங்கக்கூடிய நாடகசாலை ஒன்று அமைக்கப்படும். தாங்களே சமையல் செய்துகொள்ள விரும்பும் பிரயாணிகளுக்காக 400 சிறிய சமையலறைகள் கட்டப்படும். விவாகமாகாத பிரமசாரிகளுக்காக 16 அடுக்குள்ள பிரத்தியேக பகுதி ஒன்று அமைக்கப்படும். இப்பொழுது உலகத்தில் மிகவும் பெரிய விடுதி நியூயார்க்கிலுள்ள பென்சில்வேனியா விடுதியாகும். அது சென்ற வருஷம் திறக்கப்பட்டது. அதில் 200 அறைகள் இருக்கின்றன.

மரியாயின் மகா சங்கம்.—இந்தியாவில் இதுவரையில் கொண்டாடப்படாத இந்த மரியாயின் மகா சங்கமானது அடுத்த ஜன

வரிமீ 13-ந் தேதியாகிய வியாழக்கிழமை மாலை தொடங்கப்பட்டு, அடுத்த தினங்களாகிய வெள்ளி, சனிக்கிழமைகளில் கொண்டாடப்பட்டு, 16-ந் தேதியாகிய ஞாயிற்றுக் கிழமை காலையில் முடிவுபெறும். 15-ந் தேதியாகிய சனிக்கிழமையன்று மாலையில் வெகு ஆடம்பரமான சுற்றுப்பிரகாரம் நடைபெறும். இந்தச் சுற்றுப்பிரகாரத்தில் நாம் எற்கெனவே சொல்லியிருக்கிறபடி, குறைந்தபட்சம், 20 அதிமேற்றிராணிமார்கள், மேற்றிராணிமார்களும், நூற்றுக்கணக்கான குருக்களும், திரளான விசுவாசிகள், கன்னியாஸ்திரிகள், சந்நியாசிகள் முதலியோர்களும் வரிசை வரிசையாய்ப் பயபக்தியுடன் நடந்து செல்லும் அரிய காட்சியானது பெரு மாட்சியாயிருக்குமென்பதை நாம் பின்னும் வற்புறுத்திச் சொல்லவேண்டுவதில்லை. இந்த வைபவச் சடங்குகளை தரிசிக்க மரியாயின் பக்தர்கள் எல்லோரும், எவ்வளவு தொலைதூரத்திலிருந்தாலும், அந்த மகோற்சவக் கொண்டாட்டம் எப்போது வருமோவென ஆவலாய்க் காத்துக்கொண்டிருந்து, சென்னைக்குவந்து இந்த அரும்பெருங் காட்சியைக் கண்டுகளிக்க இதுமுதற்கொண்டே பெரு முயற்சி செய்வார்களாக!

இந்த மரியாயின் சங்கத்தின் சம்பந்தமாய் நடக்கப்போகிற வைபவங்களில், பக்திக்குரிய அரிய பொருட்காட்சிசாலையும் ஒன்று. இக்காட்சிசாலையில், திருச் சுரூபங்கள், படங்கள், பூசை யுடுப்புகள், பாத்திரங்கள், கத்திரிசால்கள், புஷ்ப ஜாடிகள் முதலிய கோவிற் சாமான்கள் ஆகியவைகளை காட்சிக்கு வைக்க அல்லது விற்க விரும்புவோர்கள், அக்காட்சிசாலையில் தங்களுக்கு வேண்டிய இடங்களுக்கு இப்போதுதானே சென்னை, அரமனைக்காரத் தெரு, மேரியான் காங்கிரஸ் ஆபீசுக்கு எழுதி உத்தரவு வாங்கிக்கொள்வார்களாக. சாவதானமாயிருந்துவிட்டால் பின்னர் எமாற்றம் அடையும்படியாய் நேரும். எச்சரிக்கை!

பெங்களூரும் மரியாயின் மகா சங்கமும்.—“கத்தோலிக் வாச்மென்” பத்திரிகையின் ஆசிரியரான மிக. சங். டி. கஸ் சுவாமிகள் சென்ற மாத மத்தியில் பெங்களூருக்குப்போயிருந்த காலையில், அவ்வூர் மேற்றிராணி ஆண்டவரவர்களையும், சங். டாபார்டு சுவாமிகளையும், சங். சர்வான்டன் சுவாமிகளையும், காலஞ்சென்ற திவான் தம்பு செட்டியாரவர்களின் மருமகனாகிய ஸ்ரீமான் சாமி செட்டியார் முதலானோர்களையுங்கண்டு பேசியபோது, சென்னையில் நடக்கப்போகிற மரியாயின் மகா சங்கத்தைப்பற்றி, அன்னோர் வெகு உற்சாகமாய்ப் பேசி, அவ்வைபவம் நடைபெறவேண்டிய ஒழுங்கு, மேரை ஆரவாரம் முதலிய விஷயங்களில் பெரிதும் ஊக்கங்காட்டி, அவைகள் விஷயமாய்த் தங்களுக்குள்ள ஆலோசனைகளைச் சொன்னதுந் தவிர, பெங்களூரிலிருந்து அநேக பிரதிநிதிகளை நியமித்து அநுப்புவதாகவும் வாக்களித்துள்ளார்கள். இந்த பெங்களூராரைப்போல் மற்ற ஊராரும் கன்னிமரியாயின் திருநாளாகிய இந்தப் பெருநாள் கொண்டாட்டத்தில் ஊக்கஞ்செலுத்துவார்களெனக் கோருகிறோம்.

பையாஸ்கோப்பும், மரியாயின் மகா சங்கமும்.—மரியாயின் மகா சங்கத்தின் சம்பந்தமாய் சென்னையில் நடைபெறப்போகும் மகத்தான சுற்றுப்பிரகாரத்தின் அரிய காட்சியையும், மகிமையையும் பெருமையையும் பிரத்தியட்சமாய்க் கண்டவர்களும் காணக்கொடுத்துவைக்காதவர்களுமான எல்லோரும் அதை எவ்விடத்திலும் எக்காலத்திலும் கண்டு களிக்குமாறு அச்சுற்றுப்பிரகாரத்தை பயாஸ்கோப் படம் பிடிக்கிற யந்திரத்தைக் கொண்டு பிடிப்பது நல்லதென்றும், அப்படிப் படம் பிடிக்கக்கூடியவர் சென்னையில் இருக்கிறாரென்றும் மரியாயின் பக்தரொருவர் தெரிவிக்கிறார். இப்படிச் செய்யக்கூடுமானால் அது விரும்பத்தக்க காரியந்தான்.

மரியாயின் மகா சங்கத்து ஞாபகப் பதக்கம்.—மரியாயின் மகா சங்கத்தின் அடையாளமாக மரியாயின் பக்தர்கள் தரித்துக்கொள்ளத்தக்க சிறு பதக்கச் சுரூபங்கள் வேண்டுபவர்கள் சென்னை, அரமனைக்கார தெருவு, அர்ச். கபிரியேல் பாடசாலையில் உள்ள மரியாயின் மசா சங்க ஆபீசுக்காகிலும், திருச்சினாப்பள்ளி, தெப்பக்குளம் போஸ்டு, அர்ச். சூசையப்பர் கலாசாலைப் புத்தக டிப்போவுக்காகிலும் எழுதி, பெற்றுக்கொள்ளலாம். அதில், சிமியோன் தீர்க்கதரிசனத்தின்போது ஊடுருவப்பட்ட வாளுடன் மரியாயின் அமலோற்பவ இருதயம் சிகப்பு வர்னத்திலும், அதைச்சுற்றி வெண்மையும் பொன்னிறமுமான லீலீ புஷ்பக்கொத்தும், ‘மரியாயின் அவலோற்பவ இருதயமே, இந்

திபர்வுக்காக வேண்டிக்கொள்ளும்' என்னும் ஜெபமும் அடங்கியுள்ளது. விலை: பதக்கம் ஒன்றுக்கு அணா 1½; ஒரு ரூபாய்க்கு பன்னிரண்டு; 7-ரூபாய்க்கு நூறு. தபாற்கூலி பிரத்தியேகம்.

மரியாயின் மகா சங்க ஞாபகச் சின்னம்.—இத்தனை அருமையும் பெருமையுமான சங்கக் கொண்டாட்டத்தை இனி வருஞ் சந்ததிகளுக்கு நினைவூட்டுவதற்கு ஏற்படுத்தலாகும் பல விஷயங்களுள், "எல்லா இந்திய கத்தோலிக்குப் புத்தகசாலை" ஒன்றுக்க் கருதப்படவேண்டுமென்று ஒருவர் பிரேரிக்கிறார். அது, "மெட்ராஸ் லிட்டரரி சொசையிடி" என்னும் கவர்ண்மென்ட் புத்தகசாலை நடத்தப்படும் ஒழுங்குப்பிரகாரமே நடத்தப்படவேண்டுமென மற்றோர் நண்பர் பிரேரிக்கிறார்.

சாம்பியன் ரீவ்ஸில் பாப்பு ஸ்தானாதிபதி.—சென்ற மாதத்தில் மேன்மைதங்கிய அர்ச். பாப்பானவரின் ஸ்தானாதிபதியாகிய மிகவும் வந். பி. பைசானி ஆண்டவரவர்கள் கோலார் தங்க வயல்களைச்சேர்ந்த சாம்பியன் ரீவ்ஸ் என்னும் ஊருக்கு விஜயஞ்செய்தார்கள். அவருடன், சென்னை அதிமேற்றிராசனத்து சிரேஷ்ட சுவாமியாராகிய மிக வந. சங். டி. கஸ் சுவாமிகளும் சென்றிருந்தார்கள். இவர்கள் சென்ற விடமெல்லாம் சிறப்பாகவேயிருந்தது. சங்கீத மேளவாத்தியத்துடனும் மிக ஆரவாரச் சிறப்பு அலங்காரத்துடனும் அவர்களுக்கு நல்வரவு கொடுக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஸ்தானாதிபதியவர்கள் செய்த பூசையில் 300 பேர் திவ்யசற்பிரசாதம் அருந்தினார்கள். அன்று மற்றைய குருக்களின் பூசைகளில் நன்மை வாங்கினவர்களின் எண்ணிக்கையையும் அதினோடு சேர்த்தால் ஆயிரத்துக்கு அதிகமாயிருக்கும். 7 மணிக்கு மிக. சங். கஸ் சுவாமிகள் பெரிய பாட்டுப் பூசை செய்தார்கள். அதன்பின் ஸ்தானாதிபதியவர்கள் அர்ச். பாப்பானவரின் பரிபூரண ஆசீர்வாதம் அளித்தார்கள். அச்சடங்குகளுக்கு திரளான விசுவாசிகள் சமூகமாயினார்கள். அவ்விசாரணையில் சுமார் 7,000 கிறீஸ்துவர்களுண்டு.

அன்று மாலை ஆராதனைக்குமுன், ஷெ கஸ் சுவாமிகள் சென்னையில் நிகழப்போகிற மரியாயின் மகா சங்கக் கொண்டாட்டத்தைப்பற்றி மிக விஸ்தாரமானதோர் பிரசங்கஞ்செய்தார்கள். கிறீஸ்துவர்கள் பற்பல விடங்களில் பார்த்திருக்கும் திருநாள் கொண்டாட்டங்களில் மிகச் சிறப்பு ஆடம்பரம் பொருந்தியதெனக் கருதப்பட்ட எந்தக் கொண்டாட்டத்தையும்விட வரப்போகும் மரியாயின் மகா சங்கக்கொண்டாட்டம் இருபது மடங்கு மீசுரமானதாயிருக்குமென்றும், மேன்மைதங்கிய ஸ்தானாதிபதியவர்களோடு குறைந்தபட்சம் 20 அதிமேற்றிராணிமார்களும் மேற்றிராணிமார்களும், அச்சடங்குக்கு விஜயஞ்செய்வார்களென்றும், கோவில்களிலும் மற்றப் பொது விடங்களிலும் மரியாயின் இணையில்லா மகிமையைப்பற்றியும், பிரதாபத்தைப்பற்றியும், அவளுடைய புண்ணியபேறுகளைப்பற்றியும், கத்தோலிக்கர்களுக்குச் சம்பந்தமான முக்கிய விஷயங்களைப்பற்றியும் அருமையான பிரசங்கங்கள் செய்யப்படுமென்றும், இந்தியா, பர்மா, இலங்கையாகிய இம்மூன்று நாடுகளிலிருந்தும் ஏராளமான விசுவாசிகள் விஜயஞ்செய்வார்களென்றும், அதுபோல, கோலார் தங்க வயல்களிலிருந்தும் பெருந் தொகையான பிரதிநிதிகள் அம்மகா வைபவத்திற்கு விஜயஞ்செய்ய முயற்சிசெய்யவேண்டுமென்றும், விசாரணைக் குருவாகிய சங். பெஸ்லேயின் சுவாமிகளும், அவ்விடத்திய கன்னியாஸ்திரிகளும் ஷெ வைபவ விஷயமாய் சென்னைக்கு வருகிறவர்களுக்குவேண்டிய ஏற்பாடு செய்வார்களென்றும் வெகு சாதுரியமாய் பிரசங்கித்தார்கள். பிரசங்கம் முடிந்தவுடன், தேவநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டு, அன்றைய மாலை ஆராதனை முற்றுப்பெற்றது. மேலும் கோலார் தங்க வயல்களைச்சேர்ந்த சாம்பியன் ரீவ்ஸிலுள்ள பல பஜனைக் கூட்டத்தாரும் தங்கள் தங்கள் பஜனை விருதுகளுடனும் வாத்தியக்கருவிகளுடனும் மரியாயின் சங்கத்தின்போது நடைபெறும் பவனியைப் பயபக்திக்குரிய விதமாய்ச் சிறப்பிப்பார்களென்க் கோரப்படுகிறது. இப்படியே மற்ற விடங்களிலுமுள்ள பஜனைக்காரரும் செய்வார்களென நம்புகிறோம்.

மதுரையில் க. இ. சங்கம்.—சென்ற ஜுலை 11-ந் தேதி மதுரையில், தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்துக் கிளைச் சங்கமொன்று ஸ்தாபிக்க, அவ்வூர் விசாரணை சுவாமியார் அக்கிராசனத்தில் கத

தோலிக்கர் கூட்டங் கூடினார்கள். ஸ்ரீமான் பி. எஸ். சூசைப் பிள்ளை அவர்கள் பி.எ., பி.எல்., சங்கத்தின் நோக்கம், கருத்துகளைப் பற்றியும், அதில் கத்தோலிக்கர் சேர்வதினால் உண்டாகும் பிரயோசனம், அதில் சேர்வதற்கு தற்காலத்தில் ஏற்பட்டிருக்கிற அவசியம் ஆகியவைகளைப்பற்றியும் கூட்டத்தினருக்குத் தெளிவாய் எடுத்துக்காட்டி உபந்நியாசித்தார்கள். சென்னை சட்ட நிரூபணச் சபைக்கு மெம்பர்களைத் தெரிந்து கொள்ளும் யோக்கியதையுடைய ஓட்டர்கள் கத்தோலிக்கரில் எத்தனை பேர் இருக்கிறார்களென்றறிவதும், அவர்களை ஷை தெ. க. இ. சங்கம் குறித்திருக்கிற மெம்பர்களுக்காக ஓட்டு கொடுக்கும்படிச் செய்வதும் முக்கியமான விஷயங்களென்று தீர்மானிக்கப்பட்டது. கூடியசிக்கிரத்தில் இன்னொரு கூட்டங் கூடி, ஷை கிளைச் சங்கம் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும், அக்கிளைச் சங்கம் ஷை ஓட்டு வேலையைக் கவனிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இப்படியே மற்ற பிரதான நகரங்களில் தெ. க. இ. சங்கத்தின் கிளைச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வேலை செய்தால் வெகு பிரயோசனமாயிருக்கும்.

ஒரு மாணாக்கனுக்கு உபகாரச் சம்பளம்.—தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தைச் சேர்ந்த சென்னை நகர்க் கிளைச் சங்கத்தாரால் சென்னை அர்ச். கபிரியேல் பாடசாலையில் 4-வது பாரத்தில் வாசிக்கும் சாமிராஜ் என்னும் மாணாக்கனுக்கு, அவன் ஸ்கூல் பைனல் பரீட்சையை முடிக்குமளவும், அதாவது மூன்று வருஷங்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க உத்தரவாயிற்றென்று கேள்விப்பட்டு சந்தோஷமானோம். இவ்வாறு ஒருவனுக்கல்ல பல மாணாக்கர்களுக்கும் இத்தகைய பொதுநலச் சங்கங்கள் உதவ வேண்டுமென்பது நமது கோரிக்கை. அப்போதுதான் படித்தவர்களின் தொகை நமக்குள் அதிகரிக்கும்.

இன்னொரு உபகாரச் சம்பளம்.—மெடிகல் காலேஜில் வாசிக்கும் டி. பி. என்னும், மாணாக்கனுக்கு, வருஷம் ரூ 250 விழுக்காடு 1920ஷு முதல் நாலு வருஷங்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தின்படி, இந்த 1920ஷுக்கு ரூ 250 ஏற்கெனவே கொடுத்துவிடப்பட்டது. இந்த மாணாக்கன் தன் படிப்பை முடித்து உத்தியோகத்தில் அமர்ந்த மூன்று வருஷங்களுக்குள் சங்கத்திலிருந்து வாங்கப்பட்ட தொகையை சங்கத்துக்குச் செலுத்திவிடவேண்டியது என்னும் நிபந்தனையின்பேரில் இந்த உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டது. இது ஒரு நல்ல உபகாரமென்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவில் அந்தகர்கள்.—இந்தியாவில் தற்போதுள்ள குருடர்களின் தொகை 60,000 மென்றும், அவர்களுக்குச் சரியான சிகிச்சை செய்தால் சுமார் 40,000 பேர் பார்வையடைவார்களென்றும், விசேஷமாய் மிக உஷ்ணமான தேசங்களில்தான் குருடர்கள் அதிகமாகக் காணப்படுகிறார்களென்றும் மிஸ்டர் ஹென்டர்சன் சிவில் உத்தியோகஸ்தர் தமது அநுபோகத்தில் கண்டதைத் தெரிவிக்கிறார். "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்பதனால் கண் பார்வை கெடாமல் வைத்திருக்கிறதற்காகக் கண்ணுடையவர் கடவுளுக்கு நன்றி செலுத்தக் கடவார்களாக.

காவல் காக்குங் சிங்கங்கள். — வட ஆப்பிரிக்காவைச் சேர்ந்த மொரோக்கோ சுல்தானிடம் 7 சிங்கங்கள் இருக்கின்றன. அவை அந்தப்புற அரண்மனையைக் காவல் காக்கின்றனவாம். நாய்களின் தொழிலை சிங்கங்கள் செய்வது என்ன ஆச்சரியமென்னலாம்.

அமெரிக்காவின் செல்வப் பெருக்கு.—மெக்ஸிக்கோ பட்டணத்தின் தெருவீதிகளையெல்லாம் ஆஸ்பால்டென்னும் தாரோடு பொன்னையும் வெள்ளியையுஞ்சேர்த்து காய்ச்சி செப்பனிடுகிறார்களாம். இவர்களின் பணச் செருக்கு எப்பேர்க்கொத்த தென்னலாம்.

தீயால் நேர்ந்த பெரும் நஷ்டம்.—சென்ற மாதம் 22-ம் தேதி சுமார் இரவு எட்டு மணிக்கு பம்பாயின் முஸ்ஜீத்து மார்க்கட்டிலுள்ள ஜவுளிக்கடைகள் 2000த்துக்கதிகமாக அக்கினிக்கு இரையாயின. நாலு கோடி ரூபாய்க்குமேல் நஷ்டமாயிற்று. இரவு முன்னேரத்தில் இத்திவிபத்து நேர்ந்தமையால் உயிர்ச்சேதம் நேரவில்லை.